1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 31-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### தபால்மந்திரி கூறுகின்றர்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற வியாழக்கிழமை வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது, தபால்-வானெலி மந்திரிபேசுகையில்: மொழிப்பிரச்சினையிலே அரசாங்கம்செய்த முடிவையிட்டு—அதாவது, சிங்களம்மாத்திரம் சட்டமாக்கப்பட்டதையிட்டுத் தமிழ்ச் சமூகத்தினர்கள் கலக்கமடைந்திருக்கிருர்கள்; என்னைப் பொறுத்தவரை தமிழ்ப்பேசும்மக்களுக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்பட மாட்டாது; எனது அதிகாரத்துக்குட்பட்ட அரசாங்க காரியாலயங்களிலெல்லாம் தமிழ்மொழிக்கோ, அன்றேல் தமிழ்ப்பேசும்சமூகத்துக்ஃகா என்னவிதமான அநீதியும் இழைக்கப்பட மாட்டாதென வாக்களிக்கறேன்எனத் தெரிவிக்கலாயினர்.

### திருச்சுருப ஸ்தாபகம்

மட்டக்களப்பு, சம்மைக்கேல் கல்லூரிப் பழையமாணவர்கள் சங்கத்தின் முயற்சியால் யேசுசபைஸ்தாபகரான அர்ச். லொயலா இஞ்ஞாசியாரின் திருச்சுரூபம்ஒன்று அக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள மைதானத்திலே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத்திருச்சுரூபத்தைத் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னெஷஸ் கிளென்னிஆண்டவர் சென்ற 2-ந்திகதி வியாழக்கிழமைபிற்பகல் திரைநீக்கஞ் செய்துவைத்தார். இந்தவைபவத்தின்போது கத்தோலிக்கரும், மற்றும்பிரமுகர்களுமாக ஆயிரவருக்குமேல் சமுகமளித்திருந்தார்கள். ஆண்டவர் அவர்கள் திரைநீக்கஞ்செய்துவிட்டுப் பேசியபோது, சம்மைக்கேல்கல்லூரியில்சேவைபுரிந்த யேசுசபையாரின் கார்த்தமாகவே இந்தத்திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டார்.

### கிராமவேலைகளுக்கு மான்யம்

மன்னர்ப்பிரிவிலே இவ்வருடம் ஆரம்பித்து நடத்தப்பட்டுவரும் கிராமாபிவிருத்தி வேலைகள்முழுவதையும் பூர்த்திசெய்துவைப்பதற்கென அரசாங்கம் 1 லட்சத்துப்16 ஆயிரப்ரூபா மான்யம்அளித்திருக்கின்றது. அடுத்துவரும் புதியஅரசிறைவருடத்திலே கிராமமுன்னேற்ற சங்கங்களுக்கு அரசாங்கம் மான்யம்அளிப்பதை நிறுத்திவிட்டிருக்குங்காரணமாகத் தற்போது இந்தமான்யம் சென்றவருடத்திலும் நாலுமடங்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தஉதவிப்பணம் அங்கு மூன்றுகாரியாதிகாரிகளினதும் பிரிவுகளிலுள்ள கிராமமுன்னேற்ற சங்கங்களுக்குப் பகிர்ந்துவழங்கப்பட்டு, அக்கவேலைகள்பல துரிதமாகநடைபெறத் தொடங்கியிருக்கின்றன.

ഗഗഗഗഗഗഗഗഗഗഗഗ

### வானெலியில் கத்தோலிக்கநிகழ்ச்சி

நிகழும் ஆவணிமாதம் 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையும் வண. டொமினிக் ஆனந்தப்பா சுவாமியவர்களின் தலைமையில் மரியாயின் மகத்துவத்தைச் சித்திரிக்கும் "மாதாவின் மகிமை" என்றகத்தோலிக்க நாடகம் இலங்கை வானெலியில் ஒலிபரப்பப்படும். கொழும்பு, கொச்சிக்கடைத் தமிழ்ப்பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர் மாணவிகள் இதிற் பங்குபற்றுவார்கள்.

ഗഗഗഗഗഗഗഗഗഗഗഗ

### மன்னர், அரசாங்க உபதலைவர்

மன்னர், அரசாங்க உபதலைவராகக் கடமையாற்றிவந்தவரான திரு. டி. எல். சந்திரசேகரா அவர்கள் கொழும்புக்கு மாற்றப்பட்டிருக்கின்றர். அவரதுசேவைநலனைப் பாராட்டுமுகமாகச் சென்ற 3-ந்திகதி வெள்ளிக்கிழமை அவருக்கு ஓர்பிரிவுஉபசாரம் நடத்தப்படலாயிற்று.

### மறந்துவிடும்படி வேண்டுகின்ருர்

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரி உயர்தரக் கல்விக்கழகத்தினதும், எச். எஸ். சி. மாணவர்களின் இலக்கிய சங்கத்தினதும் வருடாந்த விருந்து சென்ற ஆடிமாதம் 28-ந்திகதி சனிக்கிழமை நடந்தேறியது. அதற்குப் பிரதமவிருந்தாடியாகக் கொழும்பு, ஆனந்தக்கல்லூரி அதிபரான திரு. எஸ். ஏ. விஜயதிலக அவர்கள் சமுகமளித்துப் பேசியபோது: "ஆனிமாதம் 5-ந்திகதியன்று கொழும்பில்நடைபெற்றசம்பவங்களை மறந்துவிடுமாறு யாழ்ப்பாண மக்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்; அங்குநிகழ்ந்தவைகளில் சிலவற்றை நானே பார்த்திருக்கிறேன்; அவைகள் எல்லாவற்றையுமிட்டு வெகுவாக நான் வெட்கமடைகின்றேன்; எனது சொந்தச் சாகியத்தினராலே மற்றேர் சாகியத்தினர்மீது பொழியப்பட்ட இகழ்ச்சிகளையும், வசைகளையும், அவர்கள்அனுபவித்த சரீரஉபத்திரவங்களையும் நானே கண்டிருக்கிறேன்; இத்தகைய காடைத்தனமான செயல்களை எதிர்த்து, உடனேதானே எனது கல்லூரிமாணவர்கள், ஆசிரியர்கள்கூடிய சபையிலே பேசுவதற்கு இதனைஓர் சந்தர்ப்பமாகக் கண்டுகொண்டேன்; சிங்களவர்கள் நீதியான மக்களென்று தமிழர்கள் நம்பிக்கொள்ளவேண்டுமென நான் ஆசிக்கிறேன்; ஆகவே, தங்கள் முழுப்பலத்தையும் நியாயத்தின்பால் செலுத்தும்படியும், ஓர் ஐக்கிய இலங்கைக்காக வேலைசெய்யும்படியாய் அந்தத் துரதிஷ்டமான நாளிலே நிகழ்ந்த சம்பவங்களை மறந்து விடும்படியும் தமிழர்களுக்கு நான் மனுப்பண்ணிக்கொள்ளுகிறேன்; எனது அபிப்பிராயப்படி, இலங்கையை இரண்டாகப் பிளவுபடுத்துவது அபாயத்துக்கிடமான ஓர்தவருகும்; அதனல் நாட்டின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும், ஜனநாயகத்தின் பெரியதத்துவங்களையும் பாதுகாத்து வளர்க்கும்படியாக மனுப்பண்ணிக்கொள்ளுகிறேன்"எனக் கூறலாயினர்.

### சீமேந்துத் தொழிற்சாலை

யாழ்ப்பாண நகரசபையின் மாதாந்த கூட்டம் சென்ற 1-ந்திகதியன்று நடைபெற்றது. காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையிலே மற்றேர்சூளையை இனிமேலாவது தாமதஞ்செய்யாது அமைத்துத்தரும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேறியது. திரு. சி. முத்துத்தம்பி அவர்கள் இந்தப்பிரேரணையை எடுத்தாண்டுபேசியவிடத்து: காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் சீமெந்து தேவைக்குப்போதியதாயில்லை; அதனல் சீமெந்து வாங்குகிறவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் சங்கடம் ஏற்படுகிறது; ஆகவே, சீமெந்து உற்பத்தியைப் பெருக்கச் சீமெந்துத் தொழிற்சாலையில் மற்றொரு சூளையை அமைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமெனக் கூறினின்றர்.

### இரண்டுலட்சம் அந்தர் வெங்காயம்

இம்முறை யாழ்ப்பாணத்திலே இரண்டுலட்சம் அந்தருக்குமேற்பட்ட ஈரவெங்காயம் அறுவடையாகி வருகிறது. ஆனல், சென்றஆனிமாதத்தில் எதிர்பாராதவிதமாக மழைபெய்து சேதம் விளைத்திராவிடின் இந்த வெங்காய போகத்தில் மூன்றரைலட்சம் அந்தர் வெங்காயம் விளைந்திருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. இம்முறை விளைந்துள்ள வெங்காயத்தில் ஒருலட்சம்அந்தரைச் சேமித்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதில்பெரும்பகுதி விதைவெங்காயமாகப் பயன்படுத்தப்படும், மீதியான வெங்காயம் வெங்காயத்தட்டுப்பாடு ஏற்படாத வகையில் படிப்படியாக விற்பனவுக்கு அனுப்பிவைக்கப்படும். வெங்காயச்செய்கைக்கு எதிர்பாராதவிதமாக மழையினல் ஏற்பட்ட சேதத்தையிட்டு இரண்டாவதுரகமான வெங்காயத்தைக் கொள்முதல் செய்வது சம்பந்தமான சிலவிதிகளை அரசாங்கம் தளர்த்திவிட்டிருக்கிறது.

### மன்னர்ப் பட்டினசங்க தலைவர்

மன்னர்ப் பட்டினசங்க தலைவராய் இருந்துவந்த திரு. வி. ஏ. அழகக்கோன், எம். பி அவர்கள் பாராளுமன்ற கடமைகளின் நெருக்கங்காரணமாகத் தலைவர்பதவியை இராசினாமாச் செய்துவிடலாயினர். தற்போது அவரிடமாக மன்னர்ப்பட்டினசங்க தலைவராய் முதலியார் என். எம். அப்துல் காஸிம் அவர்கள் தெரியப்பெற்றிருக்கின்ருர். திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் இனிமேல் அப்பட்டிணசங்கத்தில் ஓர்அங்கத்தவராக மாத்திரம் இருந்துவருவார்.

### காலநிலை

சென்றஇருவாரங்களாகப் பகலிலே அகோரவெயில் எறித்துவந்ததாலும், இரவிலே கடுங்குளிர்காற்று உரமாக வீசிவந்ததாலும் பெரிதும்சுகாத்திய பேதம் ஏற்பட்டிருந்தது. ஆயினும், கடைசியாக இன்று வானம்இரங்கி மழைபெய்யத் தொடங்கியிருக்கிறது.

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

### அர்ச். லோயலா இஞ்ஞாசியார் திருநாள்

மட்டக்களப்பு தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதா, கோவிலிலே கீழைத்தேசங்களில் வேதபோதகஅலுவல்பெருமளவில் நடத்தும்படியாக அர்ச். சவேரியாரை அனுப்பிவைக்கக் காரணகர்த்தாவாய் இருந்தவரும், திரிகோணமலை மேற்றிராசனத்தின் பிரதம பாதுகாவலருமான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த நான்காவது நூற்றூண்டுவிழா சென்றஆடிமாதம் 29-ம், 30-ம், 31-ந்திகதிகளில் வெகுபக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. இந்தமுத்தினங்களிலும் சாயந்தரவேளை செபமாலை, பிரார்த்தனையின்பின் வண. கட்டளைக்குருவர் ஜோர்ஜ் ஈ. எல் வம்பேக் சுவாமியவர்களால் அன்னரின்புண்ணியசாங்கோபாங்க சீவியத்தைப்பற்றிச் சிறந்தபிரசங்கங்கள்செய்யப்பெற்றுத் திவ்வியநற்கருணைஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. 31-ந்திகதிகாலை அவரால் பாடற்பூசைநிறைவேற்றிப் பரிசுத்த பண்டம் முத்திசெய்யக் கொடுக்கவும் பட்டது. நிரச, மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவரின் தபசுகாலநிருபத்திலும் இத்திருநாட் கொண்டாட்டத்தின் அவசியம்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அன்று ஆண்டவர் அவர்களின் பெயர்கொண்ட திருநாளை முன்னிட்டுக் கிழக்குஇலங்கையிலுள்ள சகலகத்தோலிக்க பாடசாலைகளுக்கும் விடுமுறைநாளாயிருந்தது — நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுக்குண்டால் அழிந்த ஹிரோஷிமா

**ஜப்பானின் தென்பகுதியிலுள்ள ஹிரோஷிமா நகரிலே அணுக்குண்டு வீசப்பெற்றுப் பதினொருஆண்டுகள் சென்ற 6-ந் திகதியோடு பூர்த்தியாயின. 1945-ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ந் திகதியன்று மாலை 6-15 மணிக்கு அந் நகரிலே அணுக்குண்டு வீசப்பட்டது. அதனால் அன்று அதேநேரத்தில் அங்குள்ள புத்த கோவில்களிலும், கிறீஸ்துவ கோவில்களிலும் மணிகள் இசைக்க, மக்கள் மவுனப்பிரார்த்தனை செய்தார்கள். அணுக்குண்டுத் தாக்குதலினால் அங்கு இறந்தவர்களென்று அதிகாரதோரணையில் அறிவிக்கப்பட்ட 59 ஆயிரம் மக்களுக்கும் மரியாதை தெரிவிப்பதற்காக 30 ஆயிரம் மக்கள் ஞாபகார்த்த பாக்கத்தில் குழுமியிருந்தார்கள்.**

ஜப்பானிலே துரதிர்ஷ்டம் வாய்ந்த நகரம் ஹிரோஷிமா. இந்தநகரம் ரோக்கியோவிலிருந்து 558மைல்தூரத்திலும், ஒசாக்காநகரிலிருந்து 213 மைல்தூரத்திலும் இருக்கின்றது. இரண்டாவது உலகயுத்தம் நிகழ்ந்த காலத்திலே இந்தநகரில் சுமார்நான்கு லட்சமக்கள் வசித்திருந்தார்கள். அழகும், காய்பிரமும், சனநெருக்கமுமுள்ள இந்தநகரம் ஒருதுறைமுகப் பட்டணமாகவும் தோற்றமளித்தது. பல மாடிகளைக்கொண்ட உன்நதமான கட்டடங்கள் இதன்வீதிகளை அழகுபடுத்தின. அன்று இந்தசிங்காரநகரம் அழிந்துபட்டது. 1945-ம் ஆண்டு ஆவணிமாதம் 6-ந் திகதி மாலை 6-15 மணிக்கு இதற்கு அழிவுவந்தது.

அமெரிக்கவிமானம இந்நகரில் அந்தவேளை ஒரேயொரு அணுக்குண்டைப் போட்டது. 25,000 அடிக்கு மேல் பறந்துவந்த இந்தவிமானம் செங்குத்தாகக் கீழேபிறங்கி ஒரு அணுக்குண்டை இறக்கிவிட்டுத் திரும்பவும் மேலேபாய்ந்து பலமைலுக்கப்பால் சென்றுவிட்டது. அது இறக்கிய அணுகுண்டு சுமார் 1,700 அடி உயரத்துக்குமேல் வரும்பொழுதே வெடித்தது. அந்தவெடியின் அதிர்ச்சியால் சுமார் ஒன்றரைமைல் சுற்றளவிலிருந்த கட்டடங்களெல்லாம் சுக்கலசுக்கலாக நொறுங்கிவிட்டன. அந்தக் குண்டு வெடித்தபோது 180 அடிநீளம் கொண்ட ஒருநெருப்புச்சுவாலை தோன்றியது. இந்தச் சுவாலை நகரமுழுதும் பற்றிஎரியத் தொடங்கியது. நகரம் எரியும்பொழுது எழுந்த புகை 27 ஆயிரமஅடி உயரமவரை சென்றது. நகரின்விஸ்தீரணத்தில் 40 வீதமான பகுதி நாசமடைந்துவிட்டது. அதிலிருந்த கட்டடங்கள் இடிந்தும, தகர்ந்தும், நெருப்புக்கு இரையாகியும் படுசேதமுற்றன. இந்தஒருகுண்டினால் அந்நகரிலிருந்த நாலு லட்சமக்களில் 2லட்சத்து 60 ஆயிரம்பேருக்கு மேற்பட்டமக்கள் கொலலப்பட்டார்கள். லட்சம்பேருக்கு மேற்பட்டமக்கள் படுகாயமடைந்தார்கள். சுமார் 65,000 கட்டடங்கள் அடியோடு அழிந்துபோயின. சிலஆயிரம் கட்டடங்கள் நாசமடைந்தன. கதைகளில்படிக்கும் லங்காதகனம்போன்று ஹிரோஷிமா நகரம் தகனம்செய்யப்பட்டது. இந்தத் துரதிர்ஷடம்வாய்ந்த நகரத்தை ஒருமுறைசுற்றிப்பார்க்குமிடத்து, குட்டிச்சுவரைப்போன்று தோற்றமளிக்கின்ற படுசேதமடைந்த பெரியகட்டடம ஒன்று அங்கு காணப்படுகின்றது. இண்டஸ்றியல் புறமோஷன் ஹால் என்றபெயரோடு அன்று இலங்கிய இந்தக்கட்டடம் இன்று சீர்குலைந்தநிலைமையில் இருக்கின்றது. இந்தக்கட்டடத்தின்முன்புறத்தே அட்டமிக் பொம்பினால் அழிந்துபட்ட பலஆயிரம் கட்டடங்களுள் இதுவும்ஒன்றுஎனப் போட்எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இந்த ஒருகட்டடத்தைவிடச் சேதமடைந்தகட்டடங்களோ பகுதிகளோ ஹிரோஷிமாவில் இன்றுகாண்பதற்கில்லை. பத்துவருடங்களுக்கிடையிலே இந்நகரம் திருத்தப்பட்டு நவீன முறையில் புதியஹிரோஷிமா காட்சியளிக்கின்றது.

பழையஹிரோஷிமாவில் வாழ்ந்திருந்தவர்கள் செத்தும், கெட்டும், மறைந்தும் போய்விட்டார்கள். இன்று லட்சக்கணக்கான புதியமக்கள் இந்நகரிலே குடிவந்திருக்கிறார்கள். புதிய ஹிரோஷிமாவின் இன்றைய சனத்தொகை சுமார் 3லட்சத்து 60 ஆயிரம் பேர். பழையஹிரோஷிமாவின் மத்தியபாகம் இன்று ஒருபாக்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே அங்குமாண்டுமடிந்தவர்களின் ஞாபகசின்னம்ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் ஆவணிமாதம் 6-ந் திகதியன்று மாலை 6-15 மணிக்கு இந்தஞாபகசின்னத்தினருகில் லட்சக்கணக்கானமக்கள் ஒன்றுகூடுகிறார்கள். கண்ணீர்மல்க அந்தத்துக்கதினத்தை மௌனமாக அவர்கள் கொண்டாடுகிறார்கள். இந்தஞாபக சின்னத்துக்கருகில் புதியகட்டடம்ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. இதற்கு அட்டமிக் மியூஸியம்என்று பெயரிட்டிருக்கிறார்கள். அணுக்குண்டினால் இறந்துபட்டவர்கள், காயமடைந்தவர்களின் படங்களும், நெருப்புச்சுவாலைக்குள் அகப்பட்டு உருகியும், கருகியும், உடைந்தும், சிதறியும்போன பொருள்களும் இங்குவைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு அந்நிகழ்ச்சிபற்றிய குறிப்புகளும் அங்கு எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கும்பொழுது, உள்ளம் வெதும்புகின்றது. ஆண்டுகள் பதினொன்றுகடந்தும், அந்தக்குண்டினால் காயமடைந்த பல்லாயிரவர்கள் இன்றும் சிகிச்சைபெற்றுவருகிறார்கள். கையொடிந்தவர்களும், கால்முறிந்தவர்களும், கண் இழந்தவர்களும், உடல் கருகியவர்களும், உருமாறியவர்களும், இன்னும் பலருமாய் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

ஹிரோஷியாநகரை இன்றுபார்ப்பவர்கள் அதைஒரு அடிபட்ட நகரமென்று சொல்லமாட்டார்கள். நகரம் அவ்வளவுஅழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. பலமாடிகளுள்ள கட்டடங்கள் வீதிகளை அழகுபடுத்துகின்றன. பாக்கங்களும், பூஞ்செடிகளும், மரங்களும் நகரெங்கும் காணப்படுகின்றன. அதன்பசுமையும், செழுமையும் பழமையைமறந்து புதுமுகத்தோடு எவரையும் வரவேற்கின்றன. மற்றநகர்களைக்காட்டிலும் இன்று ஹிரோஷிமா நன்றாகவே இருக்கின்றது. அங்கு வாழ்பவர்கள் ஆரோக்கியத்தோடு காணப்படுகிறார்கள். புல்பூண்டு, மரஞ்செடிகொடிகள் நன்றாகவளர்கின்றன. வேறுபாடுகளோ, மாறுதல்களோ ஒன்றும்காணமுடியவில்லை. முன்னர் நன்றாகவிருந்து, இடையில் அழிந்து, இன்று சிறப்புற்றுவிளங்கும் இந்த நகரைக் கண்டுமகிழாதவர் இல்லையெனலாம்.

# உமதுகுழந்தை வேண்டுமானால்...

சான் றேய்னேரியோ என்பவர் தாழ்மையான ஓர்கப்புச்சின்சபைச் சந்நியாசர் அவர்புண்ணியத்திலும், புதுமையிலும் சிறந்தவர். அவரிலே சந்தோஷத்துடன் கீழ்ப்படியும்குணமும், அயராதசிநேகமும், ஓயாது செபஞ்செய்யும்பழக்கமும் விசேஷவிதமாய் விளங்கின. அவரது புதுமைகளைவிட, அவரிலேகாணப்பட்ட சிறுபிள்ளைக்குரிய மாசற்றதனம் எல்லோரையுமே அவர்பால் கவர்ந்திழுத்தது. அவர் செபித்தார், தபம்செய்தார், பெருஞ் சோதனைகளையும் செயித்தார். அவர் எல்லாவிதத்திலும் ஒருபெரியமனிதரே. இருந்தபோதிலும், அர்ச். சின்னப்பர்: "சகோதரரே, உணர்ச்சியில் சிறுபிள்ளையாய் இருக்காதீர்கள்; ஆனால், பாவத்தில் சிறுவர்களாயும், உணர்ச்சியில் பரிசுத்தமாயும் இருங்கள்" என்று சொல்வதுபோல இவரும் ஓர்மேலானவிதத்தில் மாசற்ற சிறுபிள்ளையாகவே இருந்தார். ஆகவே, சிறுபிள்ளைகளை—விசேஷமாய்க் குழந்தையேசுவை அதிகம்நேசித்துவந்தார். கடைசியாக அவருடைய நேசத்துக்குத் தகுந்தபலன் கிட்டியது.

அர்ச். ஐந்துகாயப் பிரான்சீஸ் ஒரு பயங்கரமானஓநாயைச்சாந்தப்படுத்திய கூபியோஎன்னும் பட்டணத்துக்கோயிலிலே கர்த்தர்பிறந்த திருநாளன்று இரவு குடிலின்முன் றேய்னேரியோ நெடுநேரம் முழந்தாட்படியிட்டிருந்தார். அவர் வைக்கோலின்மேல் வளர்த்தப்பட்டிருந்த பாலன் சுரூபத்தை உற்றுநோக்கிக் கொண்டிருக்கும்போது அதைத் தமதுகையில் ஏந்தவேண்டுமென்ற பேராவல் அவரைப் பிடித்தது. "பரலோக பிதாவே, ஆயர்களும், மூவரசர்களும் உமதுதிவ்வியசுதனைக் கண்டதுபோல் நானும் அவரைக்காணச்செய்யும்; அவர் தமதுதாயாரின் கரங்களிலிருந்தது போல் நானும்காணச்செய்யும்" என்று செபித்தார். பின்னர் நடுச்சாமஆராதனைக்கு மணியடிக்குமுன் சிறிது இளைப்பாறுவதற்காகப் போர்வையை எடுத்து அணிந்துகொண்டு மெல்லத் தமதுஅறைக்குச் சென்றார். அங்கே தமதுஅறையின் கதவை அடைந்து அதனைத்திறந்தார். பிரகாசமிக்க கதிர்கள் அவ்வறையினின்றும் வெளிவந்தன. அறையில் தீப்பிடித்ததோஎன்று நினைத்துக்கொண்டு அதனுள் அடியெடுத்துவைத்தார். அதோ! பிரகாசமும், அழகும்வாய்ந்தமாதா அங்கு நின்றாள் அவர் உடனே அவளை அறிந்துகொண்டார். அவர் சிலசந்தர்ப்பங்களிலே கீழைத்தேசபடங்கள் பலவற்றில் பார்த்திருப்பதுபோல் கலிலேயமாதின் பலவர்ணமுள்ள, தொங்கும் ஆடையை அவள் அணிந்திருந்தாள். அவளுடையதிருக்கரங்களில் குழந்தையேசு இருந்தார். றேய்னேரியோசந்நியாசியார் தமதுஆத்துமம் மதுரத்தால் வழிந்தோடுவதாயும், தமதுஇருதயம் சிநேகத்தால் எரிந்துகொள்வதாயும் உணர்ந்தார். முழந்தாட்படியிட்டுத் தடுமாற்றத்துடன் "நீங்கள் வருவீர்களென்று எனக்குத்தெரியும்" என்று சொன்னார்.

பெத்லகேமில் கிறிஸ்மஸ்இரவன்று கேட்கப்பட்ட "குளோறியா" என்னும் கீதம் ஆகாயத்தைநிரப்பிற்று. அந்தப் பரலோகதாய் றேய்னேரியோவின் கரங்களில் திருக்குழந்தையேசுவை அமைதியாகவைத்தாள். அவரும்தம்முடையசெபம் கேட்கப்பட்டதை நினைத்து ஆச்சரியப்பட்டாரேயன்றிப் பிறிதொன்றும் சொல்லவுமில்லை, செய்யவுமில்லை. அவரது கண்களிலிருந்து மாத்திரம்ஆனந்தக்கண்ணீர் ஆறாக வழிந்தோடிற்று.

அதன்மேல் திடீரென ஒருஇருள் கவிழ்ந்ததுபோல் அவருடைய மோட்சானந்தத்தைக் கலைத்து, கீழ்ப்படிதலுக்கு அழைக்கும்மணி பலமாக அடித்தது. அந்தஅழைத்தலுக்கு அவர் போகவேண்டும்—மோட்சகாட்சியின் நிமித்தந்தானும் கீழ்ப்படியாமலிருப்பது அவரால்கூடாது. ஆனால், தமது விருந்தாடிகளை அவர் என்செய்வது? சந்நியாசியாரின்மனம் அலைக்கழிக்கப்பட்டது. அந்தக்குழந்தையைப் போகவிட அவரால்முடியவில்லை. இருந்தாலும் மணிச்சப்தம் இன்னும் பலமாகக்கேட்டது. றேய்னேரியோ எழுந்து, தமதுமேற்போர்வையினுள் குழந்தையைஒளித்துக்கொண்டு, "மாதாவே; என்னைமன்னியும்; கீழ்ப்படிதலின்நிமித்தம் நான் உம்மைவிட்டுப் போகவேண்டும்; உமது குழந்தை உமக்குவேண்டுமானால் கோவிலுக்கு வாரும்" என்று சொல்லிவிட்டு அறையினின்றும் வெளிகொண்டார். இது மரியாதையற்றசெயல். அவர் நமது திருத்தாயிடம் முரட்டுத்தனமாய் நடந்துகொண்டார். ஆயினும், அவள் தம்முடையமகனை அவருக்குக் கொடுக்கவில்லையா? படிகளில்இறங்கி ஓடினார். திருக்குழந்தையிடமிருந்து ஒரு சப்தமும்வரவில்லை. அவரின் அறையில் தனியேவிடப்பட்ட தாயிடமிருந்தும் ஒருமுறைப்பாடும் வரவில்லை அவர் கோயில்கதவை அடைந்தார். ஆசிநீரைத்தொடத் தமதுகையை நீட்டினார் அப்பொழுது, தமதுகரங்களிலிருந்த அந்தஇலேசானபாரம்மறைந்ததாகஉணர்ந்தார். குழந்தையேசு தமது தாயிடம் திரும்பிவிட்டார்.

றேய்னேரியோ கணக்காணும் ஒரு மனிதனைப்போல் கோவிலுள்சென்றார். சந்நியாசிகள் அப்பொழுதுதான் மந்திரமாலைதொடக்கினார்கள். அப்போது கோவிலினுள் ஒருபரலோகபரிமளம் நிறைந்திருப்பதைக் கவனித்தார்கள். ஆனால், இன்னும் சகோதரர் றேய்னேரியோவின் இரகசியத்தை அறிந்தார்களில்லை. ஆனை, வயதுசென்ற அப்புனிதவானின் வதனத்தில் விளங்கிய பரலோகசமாதானமும், சந்தோஷமும் அவர்களுக்குச் சந்தேகத்தைக்கொடுத்தன. பரிசுத்தத்தகன்னிகை அவருடைய மரியாதையற்றதனத்தைப் பொருட்படுத்தினவளாகத் தோன்றவில்லை. அதற்குப்பின் சிறுவருக்குரிய இருதயத்தைக்கொண்ட அந்தச்சந்நியாசியாருக்கு விளையாட்டுத்தோழனாக அவள் தம்முடையமகனை அடிக்கடி கொண்டுவந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

**பாப்பரசரின் புதிய குருமடம்**

இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள 15 மேற்றிராசனங்களைச் சேர்ந்தவர்களும், பூனாநகரியுள்ள பாப்பரசர்குருமடத்தில் படித்து வந்தவர்களுமான 19 குருத்துவ மாணவர்கள் அன்று முதல்வெள்ளிக்கிழமை பூனாமேற்றிராணியாரான மகாவண. அன்ட்றூ டி'சூசா ஆண்டவராலே அர்ச். சவேரியார் கோவிலில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார்கள். பாப்பரசர் குருமடம் கண்டியிலிருந்து சென்றவருடம் ஆனிமாதம் பூனாநகருக்கு மாற்றப்பட்டபின் அதிலே குருப்பட்டம் பெற்றுக்கொண்ட முதலாவது குருமார் குழு இதுவாகும். கண்டியிலே இருந்துவந்த சரித்திரபூர்வமான பழையமடமானது இலங்கையர்களுக்கென விடப்பட்டு, அங்குள்ளபுதியமடமானது ரோமாபுரியிலே விசுவாசப்பரம்புதற் சபையின் கட்டளைப்படி ஆட்சி கொள்ளப்படலாயிற்று. பொதுவிலே இந்தக்குருமடம் தற்போது ரோமையின் சிறிய கிறகோரியாரின் சர்வகலாசாலையாகக் காட்சியளிக்கின்றது. இதன்பேராசிரியர்களில் அதிகமானோர் குருப்பட்டத்துக்குப் பிந்திய கலைகளை அங்குதானே பயின்றவர்கள். முன்னொருகாலம் கோவைநகர் "கீழ்த்திசையின் ரோமைநகர்" என்றும் அழைக்கப்பட்டது. ஆனால், இன்று பூனாநகர் அந்தச் சிறப்புப்பெயரை வகிக்கத் தொடங்கியிருக்கிறது. குருமடத் துச்சிற்றாலயம் தற்போது கட்டப்பட்டுவருகிறது.

**முதற் குடும்பசெபமாலைப்படையணி**

உலகில் குடும்பசெபமாலைப் படையணியைப் பரக்கநடத்திப் பிரஸ்தாபமாக்கியவர் வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியாரே. ஆனால், முதன்முதற் குடும்பசெபமாலைப் படையணியைத் தொடக்கி நடத்தியபெருமை தொமினிக்குவின் சபையைச் சேர்ந்த வண. எஸ்மண்ட் கிளிமெக்சுவாமியாருக்கே உரியதாகும். இவர் பிரித்தானியிலே 1950-ம் ஆண்டு இதனைத்தொடக்கினார். ஓர்வானை இதற்கென்று சித்தஞ்செய்து, அதிலே நாடெங்கும் சுற்றுப்பிரயாணஞ்செய்து, தினமும் குடும்பசெபமாலைசொல்லச் சம்மதித்த குடும்பங்களிடம் வாக்குறுதி பெற்றுவந்தார். இவர் சுற்றுப்பிரயாணஞ்செய்த வானின் இருபக்கங்களிலும் "பாத்திமாவின் செய்தி" என்ற வார்த்தைகளுடன்கூடிய தேவமாதாவின் படத்தைச்சூழவர ஓர் பெரியசெபமாலை சித்திரிக்கப்பட்டிருந்தது. இந்தப் படையணி தொடங்கிய ஒருவருடகாலத்துள் சுவாமியார் 7,000 மைல் சுற்றுப்பிரயாணஞ்செய்து, 15,000குடும்பங்களின் வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டார். அதனால் இவர் சுற்றுப்பிரயாணஞ்செய்த ஒவ்வோர்மைலுக்கும் இருமடங்கு வாக்குறுதிகளைப் பெறவேண்டுமென்ற அவரது விருப்பம் பூர்த்தியாயிற்று. ஆனால், இவர் அடுத்த வருடம் மோல்த்தா தீவுக்குத் தொமினிக்குவின்சபை மாகாண சிரேஷ்டராகத் தெரியப்பெற்றமையால் அவரது குடும்பசெபமாலைப்படையணி நின்றுவிட்டது.

**ஒக்ஸ்வோட் சர்வகலாசாலை மாணவர்**

இங்கிலாந்திலேபிரசித்திபெற்ற ஒக்ஸ்வோட் சர்வகலாசாலையானது, 1920-ம், 1930-ம் ஆண்டுகளில் இருந்ததைவிடத் தற்போது சமயப்போக்குடையதாய்க் காட்சியளிக்கின்றது. மாக்ஸியர்களென்றும், கம்யூனிஸ்தர்களென்றும் அச்சர்வகலாசாலை மாணவர், மாணவிகளிடையே இருந்தவர்களின்தொகை குறிப்பிடத்தக்கவிதத்தில் இப்போது குறைந்துபோய்விட்டது. அச்சர்வகலாசாலை மாணவர்களில் 51 விகிதமானோரும், மாணவிகளில் 63 விகிதமானோரும் தத்தம் சமயத்தைக் கிரமமாக அனுசரித்துவருகிறார்கள். மற்றும் 6 விகிதமாணவர்களும், 8 விகித மாணவிகளும் அச்சர்வகலாசாலையிலே சமயானுசாரப் பற்றுடையவர்களாய் இருந்துவருகிறார்கள். இவ்விதம் அச்சர்வகலாசாலை மாணவர், மாணவிகளிடையே சமயானுசாரம் தலையெடுக்கக் காரணம், இரண்டாவது உலக யுத்தமும், உலகநெருக்கடியுமே காரணமென்று சொல்லப்படுகிறது.

**பாப்பரசருக்கு நன்றிஉபகரிப்பு**

பாப்பரசரின் குருத்துவ தங்க யூபிலி ஞாபகார்த்தமாய் ரோமாபுரியில் விளங்குகின்ற அர்ச். சியூஜினியாரின் மகாலயத்திலே ஞானஸ்நானம்அருளும் பகுதியிலுள்ளசுவரினுள் தேவதாயாரின் மோட்சாரோபணத்தை அழகாக வர்ணித்துப் பலவர்ண சலவைக்கற்கள்கொண்டுசெய்த சித்திரவேலைப்பாடொன்று நவமாக அமைக்கப்பெற்று அன்றுசனிக்கிழமை பிரதிஷ்டை செய்யப்பெற்றபோது, பரிசுத்தஸ்தானத்தினிடமாய் இருந்துவருகின்ற ஜேர்மன் ஸ்தானிகரும், கொலோன்நகர்மேயரும் சமுகமளித்திருந்தனர். யுத்தத்துக்குப் பிற்பட்டகாலத்திலே ஜேர்மனிக்கு உதவிசெய்த பல்வேறுநாடுகளுக்கும், தனிப்பட்ட பேர்களுக்கும் நன்றிதெரிவிக்குமுகமாக ஜனாதிபதி ஹெஸ்அவர்களால் 1951-ம் ஆண்டு ஆக்கப்பெற்ற ஜேர்மன் கம்மிற்றியாலே நன்றியறிதலின் அன்பளிப்பாகப் பரிசுத்தபிதாவுக்கு இந்தச்சித்திரவேலைப்பாடு சங்மானிக்கப்படலாயிற்று. ஆதரவற்றிருந்த மக்களுக்குப் பாப்பரசர்அனுப்பிய உணவுக்கும், உடைக்குமாகவும், அகதிகளுக்கும், நோய்வாய்ப் பட்டவர்களுக்கும் அவர்செய்த ஒத்தாசைகளுக்காகவும் முன்சொன்னகம்மிற்றி அவருக்கு நன்றிதெரிவித்துள்ளது. இந்தச்சித்திரவேலைப்பாடு ரோமையின் விக்கார்ஜெனரலான கருதினல் மிக்காரு ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று.

**அதிவிருத்தாப்பிய குருவானவர்**

ஐக்கிய அமெரிக்கதேசத்தில் அதிவிருத்தாப்பிய குருவானவராகவும், உலகில் அநேகமாய் இன்னுமே ஊக்கமாக உழைத்து வருகிற அதிவிருத்தாப்பிய குருவானவராகவும் வண. தோமஸ் போர்கேர்டிங் சுவாமியார் கொண்டாடப்படுகிறார். தற்போது 96 வயதுடையவரான இவர் அங்கு கொலிஜ்வில்நகரிலே தாம் இருந்துவரும் ஆசீர்வாதப்பர்சபை ஆச்சிரமத்திலிருந்து செம்வாவியைச்சேர்ந்தசிப்பெவா இந்தியர்கள்மத்திக்குத் தமது 65-வது வருடாந்த மிஷனரிய பிரயாணத்தைச் சமீபத்திலே நடத்தியிருக்கின்றார். வண. போர்கேடிங்சுவாமியார் இந்தியானாவிலே அமெரிக்க லின்கன் ஜனாதிபதி முதன்முறையாக அதிகார பதவியேற்று ஒருமாதத்தின்பின் பிறந்தார். 1884-ம்ஆண்டு இவர் குருப்பட்டம்பெற்றார். இவரது பிரயாணத்திலே மற்றோர் அதிவிருத்தாப்பியரான வண. ரேமன் ஹோமர்சுவாமியாரும் அதே ஆச்சிரமத்திலிருந்து கலந்துகொள்ளுகிறார். இவருக்கு வயது 93.

**பாப்பரசரின் ஆண்டுவிருது**

பரிசுத்தபாப்பரசரது நிகழும் வருடஆளுகையின் ஞாபகார்த்தமாகச் செய்யப்பெற்றுள்ள விருதானது, அவர் சென்றவைகாசிமாதம் 1-ந் திகதியன்று சம்பேதுருவானவர் மகாலயசதுக்கத்திலே தொழிலாளரிடமிருந்து அன்பளிப்புகள் பெற்றுக்கொள்வதைக் காண்பிக்கின்றது. தொழிலாளரின் பாதுகாவலராக அர்ச். சூசையப்பரைப் பிரகடனஞ்செய்ததற்கும், தொழிலாளியான அர்ச். சூசையப்பர்திருநாளை வைகாசிமாதம் 1-ந் திகதியன்று ஏற்படுத்தியதற்கும் நன்றியறிதலாகவே இந்த அன்பளிப்புகள் செய்யப்படலாயின. தங்கத்திலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் செய்யப்பெற்றுள்ள இந்தவிருதுகள் பாப்பரசரால் ஞாபகார்த்தமாக விசேஷதரிசகர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றிலே இருதங்க, இரு வெள்ளி, இருவெண்கல விருதுகள் — அதாவது, ஆறுவிருதுகள் கருதினல் கனலி ஆண்டவராலே பாப்பரசருக்குச் சங்மானிக்கப்படும். ஓர்பாப்பானவர் மரிக்கும்போது, இந்த வருடாந்தவிருதுகளில் ஒருதொகையானவை அவருடன் சேமிக்கப்படுகின்றன.

**2,15,000 பவுண் மரணசாதனம்**

ஐக்கிய அமெரிக்கதேச சென்லூயிஸ்நகர் வாசியான திரு. சாள்ஸ் சிமிற்அவர்கள் தமது 79-ம் வயதிலே சென்ற சித்திரைமாதம் காலஞ்செல்லலாயினர். இவர் ஜேர்மனியிலிருந்து அப்போது நாடுகடத்தப்பட்டிருந்தார். ஆயினும், தமது மரணசாதனத்தில் இவர் ஜேர்மனியிலே பேர்ஸ்சால்நகரிலுள்ள தமது முன்னோரின்கோவிலாகிய அர்ச். மர்த்தினார்கோவிலைத் திரும்பக் கட்டியெழுப்புவதற்கென்று 2,15,000 பவுண் விட்டுப்போயிருக்கின்றார். இந்தக்கோவில் சென்றயுத்தத்திலே வெடிகுண்டு களவிசப்பட்டுச் சேதமடையலாயிற்று. ஓர்பாலியனாக இருந்தபோது இந்தக்கோவிலுக்குத்தான் இவர்போகும் வழக்கமுடையவராயிருந்தார்.

**நோயாளரின் அப்போஸ்தலத்துவம்**

ஐக்கிய அமெரிக்கதேசத்தில் ஆரம்பமாகித் தற்போது உலகின் பல்வேறுநாடுகளிலும் பரந்துவருகின்ற திருச்சிலுவைப்பாதை அப்போஸ்தலத்துவத்தைத்தவிர நோயாளரின் அப்போஸ்தலத்துவமென மற்றொன்றும் பிரித்தானியிலே மறுமலர்ச்சியடையத் தொடங்கியிருக்கிறது. கருதினல் கிறிவ்வின்ஆண்டவர் அங்கே இதனைத் திரும்பவும் ஆரம்பித்துவைத்திருக்கின்றார். இது 1931-ம் ஆண்டு உலாந்தாநாட்டில் குருமாரால் ஆரம்பிக்கப்பெற்று, மூன்று வருடங்களின்பின் 11-ம் பத்திநாத பாப்பானவரால் அங்கீகரிக்கப்படலாயிற்று. இதன் ஓர் நோக்கம், நோயாளர்கள் தங்கள் துன்பவேதனைகளைத் தேவனுடைய இராச்சியத்திற்காகத் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதாகும். விசேஷமாய் அவர்கள் ஒருவர் மற்றொருவரின் இரகசியகருத்துகளுக்காகத் திருப்பாடுகளின் மணித்தியாலங்களான மத்தியானம் 12 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்குமிடைப்பட்ட மணித்தியாலங்களிலே தாங்கள் அனுபவிக்கும் பாடுகள், வேதனைகளை ஒப்புக்கொடுப்பதாகும். இந்த அப்போஸ்தலத்துவத்தின் தேசியதலைவராக ஓர்சுவாமியார் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

**தன் சொந்த நலனைப் பாராட்டாமல் சமுதாயத்துக்காக உழைக்கிறவன் அதிகஞ் செய்கிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆவணி மாதம்

தேவதாயாரின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** பிரிவினைக்காரரின் இயக்கங்களும், மூடப் பக்தி வளர்ச்சியும் செவ்வனே தடைப்படுமாறு வேண்டுக்கொள்வது.

**மிஷன் கருத்து:** ஜப்பானிலே இளைஞர்கல்வி சமயப்பற்றின் அடிப்படையில் ஊன்றியிருக்குமாறு மன்றாடிக்கொள்வது.


சத்தியவேத

## பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
ஆவணிமாதம் 9-ந் திகதி


## தன்கையே தனக்குதவி

காலந்தோறும் உலகின்பல நாடுகளிலும் அபாயகரமும், நெருக்கடியுமான நிலைமைகள் ஏற்படுவது இன்றையஉலகில் ஓர் வழக்கமாகிவிட்டது. அப்போது கோறியாவில். அதன்மேல் இந்தோசீனாவில். இந்தியாவிலே காஸ்மீரில். ஜேர்மனியிலே பேர்ளினில். மத்தியகிழக்கிலே யூதர்களின் இஸ்ரேயேலில். கடைசியாக இன்று சுயெஸ்கால்வாயில். இந்தக்கால்வாயை எகிப்திய ஜனாதிபதியான நாஸர் திடீரெனத் தேசியமயமாக்கி விட்டது — அதாவது எகிப்தின் சொந்தஉடைமையாக்கிவிட்டது. உலகஅரசுகள் மத்தியிலே பெருங்கொந்தளிப்பை உண்டுபண்ணி விட்டிருக்கிறது. இதிலிருந்து உலகயுத்தம் ஒன்று மூண்டுகொள்ளுமா? அன்றேல் சமாதான மகாநாடுகள் மூலம் சமரசமும், அமைதியும் ஏற்படுமா? என்று இப்போது ஒன்றுஞ்சொல்லிக்கொள்ள வியலாது. ஆனால், உலகில் சமாதானமும், அமைதியும் நிலவவேண்டுமென்பதே நமது பேரவாவாகும். ஆனால், யுத்தம்ஒன்று வந்தால் இலங்கையைப் பொறுத்தமட்டிலே அது ஒருசாகியத்தை மாத்திரம் பாதிக்கமாட்டாது. சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் முதலாம் சகல சாகியத்தினரையுமே அதுபாதிப்பதாகும். இவர்களிலும் அரசாங்கபாஷை 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தாலே வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களே — தமிழ்ப்பேசும் மக்களே வெகுவாகப் பாதிக்கப்படுவார்களென்று சொல்லவேண்டியதில்லை. அன்றுதினம் ஆனந்தாக்கல்லூரிப் பாலர்பகுதிப் பரிசளிப்புவிழாவிலே சுகாதார மந்திரியான திருமதி விமலா விஜயவர்த்தன பேசுகையில், "இன்றுள்ளஅரசாங்கம் சிங்கள அரசாங்கமாகும்; இத்தகைய ஆட்சியினைச் சுமார் நானூறுஆண்டுகளுக்குப்பின் நாம் பெற்றுள்ளோம்" என்று கூறியிருப்பதை ஞாபகத்தில் என்றும் வைத்து, இனிமேல் "தன்கையே தனக்குதவி" என்று வேணும்வேண்டாம் தமிழ்மக்கள் தனித்துவாழும் வழிதுறைகளில் இறங்க வேண்டியநிலைமை வந்துவிட்டது. அன்று ஓர் தமிழ்ப்பெரியார் பேசியதுபோல, "தங்களைத் தாங்களே கவனிக்க வேண்டிய நிலையிலும், கடவுளின் பொறுப்பில் வாழவேண்டிய நிலையிலும் தமிழர்கள் இன்று வந்துள்ளார்கள்; தமிழர்களுடன் நியாயமான போட்டியில் வெற்றிபெற முடியாதென்று சிங்களவர்கள் பீதியடைந்தமைதான் இந்த நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நிலைக்குக் காரணமாகும்; 'சிங்களம் மாத்திரம்' சட்டத்தின்மூலம் சிங்களவர்கள் இவ்விதநடவடிக்கை எடுத்துள்ளபோதே சிங்கள அரசாங்கத்தினிடமிருந்து எந்தவிதமான நீதியையும், நியாயத்தையும் தமிழர்கள் எதிர்பார்ப்பதில் பயனில்லை; ஆகவே, இனிமேலும் தமிழர்கள் சிங்களவர்கள்மீது நம்பிக்கைவைத்துத் தங்களைத்தாங்களே ஏமாந்துபோகச் செய்யாமல் எதிர்கால நலன்களுக்காகத் தங்கள்மீதே நம்பிக்கைவைக்கவேண்டியதுதான் சரியான மார்க்கமாகும்." இவைகளையெல்லாம் மனதிற்கொண்டு தமிழ்மக்கள் தமிழ்மக்களுக்காக வாழத்தொடங்க வேண்டும். தமிழ் மக்களுக்குத் தமிழ்மக்களே கைகொடுத்துதவ வேண்டும். தமிழ்மகன் ஒருவருக்குத் தலையிடிப்பின் அதுஎல்லோருக்குமேஇடிப்பதாகஉணரவேண்டும். தமிழ்மகன்ஒருவர் பட்டினியாயிருப்பின் எல்லோருமே பட்டினி கிடப்பதாக எண்ணவேண்டும். தமிழ்மக்கள் இன்னும் ஐக்கியப்படவில்லை என்பது மெய்தான். ஆனால், அவர்கள் ஐக்கியப்படுங்காலம் ஓர்நாள் வந்தே தீரும். அதுவரை ஒருவரைஒருவர்—ஒருகட்சியினரை மற்றொரு கட்சியினர் பத்திரிகைவாயிலாகவோ, பகிரங்க கூட்டங்கள் மூலமாகவோ கண்டிப்பதையும், தூற்றுவதையும், கடிந்துகொள்வதையும் நிறுத்திக்கொள்ளவேண்டும். தமிழ்மக்கள் உற்பத்திசெய்யும் விளைபொருட்களையோ, கைத்தொழிற்பொருட்களையோ, வியாபாரப்பொருட்களையோ தமிழ்மக்கள் மனோற்சாகமாக ஆதரிக்க வேண்டும். "குரங்குக்கும் தன் குட்டி பொன்குட்டி", "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்பதை நினைவிற்கொண்டு அவைகள் இளக்கமாயிருந்தாலென்ன, திறமாயிருந்தலென்ன, அவைகளையே வாங்கிப் பயன்படுத்தவேண்டும். செல்வர்களாய் இருப்பவர்கள் பிழைப்பற்றிருப்பாருக்குப் பிழைப்புக் காட்ட வேண்டும். இதற்கென ஆங்காங்கு தொழில்துறைகளைத் தொடக்கிவிடவேண்டும். யுத்தம் வரலாம், வராமலிருக்கலாம். அரசாங்கத்தால் கஷ்டம் வரலாம், வராமலிருக்கலாம். ஆனால், தமிழ்மக்கள் இயன்றமட்டும் சிக்கனமாக வாழ்க்கைநடத்தியும், ஆடம்பரவாழ்க்கையைநிறுத்தியும் வருமுன்காப்பவனைப்போன்று புத்தியாய்நடந்து கொண்டால் எந்த நிலைமையையும் சமாளித்துக் கொள்ளலாம்.

---

### வண. அலெக்சாந்தர் கியோம், O. M. I. சுவாமி

அவர்களின்

முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்கு அவசியமான புதுமைகளைப் பெறுவதற்குச்

### செபம்

**"கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" என்று திருவுளம்பற்றிய யேசுவின் திவ்விய இருதயமே, உம்மைநோக்கிப் பிரார்த்திப்போரின் எளிய மன்றாட்டைக் கிருபையாய் ஏற்றருளும். தேவரீருக்குச்சித்தமானால், உமது அமலோற்பவதாயாரின்வேண்டுதலை முன்னிட்டு, உம்முடைய ஊழியனாகிய அலெக்சாந்தர் கியோம் என்ற குருப்பிரசாதியைப் புதுமைகளினாலும், அற்புதங்களினாலும் மகிமைப்படுத்தி, உமது நாமத்தின் தோத்திரத்துக்காக அவரை உம்முடைய அளவற்றவல்லபத்தால் ஓர் முத்திப்பேறுபெற்றவராக நியமிக்கும்படி கிருபைகூர்ந்தருளும் ஆமென்.**

(ஏதும் விசேஷசகாயங்களுக்காக மன்றாடினால் அவற்றை இங்கேகுறிப்பிடலாம்)

**யேசுவின் திருஇருதயமே, உமது தேவநற்கருணையின் இராச்சியம் வருக.**

**ஓ மரியாயே, எங்கள்மீது தயவாயிரும்.**

**அர்ச். சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**பாலகயேசுவினதும், திருமுகத்தினதும். அர்ச். திரேசம்மாளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

*Imprimatur:*

✠ THOMAS COORAY, O.M.I.,
Archbishop of Colombo.
14-7-56.

---

## கல்லோயாக் கலகம்

### கலகத்துக்குக்காரணம் சிங்களவரே

மானிப்பாய் ஞாபகார்த்த ஆங்கில கலாசாலைப் பரிசளிப்புவிழா சென்ற 31-ந் திகதி பிற்பகல் நடந்தேறியது. அதிலே கொழும்பு ஆர்ச்டீக்கன் கனம். ஹெறல்ட் டி சொய்சா அவர்கள் பேசியபோது: "எவர் என்னதான் சொன்னபோதிலும் கல்லோயாவில் நடைபெற்றது வகுப்புக்கலகமேயன்றி வேறொன்றுமில்லை; இந்தக்கலகத்துக்கு ஆரம்பத்திலிருந்தே சிங்களவர்கள்தான் காரணம்" என்று கூறலாயினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"நான் ஓர்சிங்களவராய் இருந்தபோதிலும் இந்தவிழாவில் கலந்துகொள்வதையிட்டுப் பெருமையடைகிறேன். இந்நாட்டில்வாழும் இருபெரும் சமூகத்தினரிடையே இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையையிட்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. இந்நாட்டின் சுதந்திரத்திற்காக ஒற்றுமையுடன் போராடிவந்த சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பேர்க்கர், புத்தர், இந்துக்கள், கிறீஸ்துவர்களாகிய பல்வேறு சமூகத்தினர் அந்தச்சுதந்திரம் கிடைத்தபின் பிரிவதென்றால் இது மிகவும் வருந்தத்தக்கதே.

"அரசியற்சுதந்திரம் பெற்றநாம் தேசியஒற்றுமையை இழந்துவிடுவதென்றால் இதைவிடக் கவலையளிக்கக்கூடியது வேறெதுவுமே இருக்க முடியாது. நமதுசமூகங்களிடையே ஏற்பட்டுவரும் பிளவைச் சிறிதேனுங்குறைக்கச் சிங்களசமூகத்தைச் சேர்ந்தஎனக்கு இவ்விழாவிற்பேசச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதை ஓர்பாக்கியமாகவே கருதுகிறேன்.

"கல்லோயாக் கலகத்தின்போது அங்குநடைபெற்றஅட்டூழியங்களைப் பற்றிக் கல்லோயாவுக்கு நான் விஜயஞ்செய்திருந்தபோது பல்வேறு வட்டாரங்களிலுமிருந்து அறிந்துகொள்ளுஞ் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எவர் என்னதான் சொன்னபோதிலும் கல்லோயாவில் நடைபெற்றது வகுப்புக்கலகமே தவிர வேறொன்றுமில்லை. இந்தக் கலகத்துக்கு ஆரம்பமுதல் சிங்களவர்களே காரணமாக இருந்திருக்கிறார்கள். ஆனால், ஒருகத்தோலிக்க சிங்களஅதிகாரியோ, அல்லது மனிதனோ இக்கலகத்தில் ஈடுபட்டதாகக் காணப்படவில்லையென்றும், வகுப்பு அல்லது இனவெறி அவரிடம் காணப்படவில்லையென்றும் ஓர் உயர்தர நிர்வாகஅதிகாரி கூறினார். இதற்காக ஆண்டவனுக்குத் துதிகூற வேண்டும். அநேக சிங்களக் கிறீஸ்துவர்கள் தங்கள் தமிழ்ச்சகோதரர்களைக் காப்பாற்ற முயன்றபோது, தங்கள் சிங்களச் சகோதரர்களால் கடுமையாகத்தாக்கப்பட்டுக் கஷ்டமனுபவித்திருக்கிறார்கள்.

"அநீதியே கலகங்களுக்குக் காரணம் அதிகாரத்திலுள்ள சில தனிப்பட்டவர்களே தங்கள்அதிகாரத்தை மற்றவர்கள்மேல் திணிக்க அநீதி இழைக்கின்றனர். அநீதியைஅகற்றினால் நெருக்கடி உடனடியாகத் தீர்ந்துவிடும்" என்பதே.

---

● இத்தாலியிலே மெருனோநகருக்குச்சமீபமான காஸ்டெல்பெல்லோ எனுமிடத்தைச்சேர்ந்த கத்தோலிக்க் யுவர்கள் ஒன்றுசேர்ந்து மார்சில்என்ற 9,800 அடி உயரமான மலைச்சிகரத்தின் உச்சியிலே 49 அடி உயரமான அறையுண்ட திருச்சிலுவை ஒன்றை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

● அணுக்குண்டுகள் இப்பொழுது பரீட்சார்த்தமாக வெடிக்கப்படுவதுபோல் இன்னும் இருபதுவருடங்களுக்கு வெடிக்கப்படுமேயானால் எதிர்கால சந்ததியாரிடையே அகாலமரணங்கள் இலட்சக்கணக்கில் அதிகரிக்குமென்றும், பிரசவமரணங்கள் பெருகுமென்றும் பிரபல பிரித்தானிய சீவவர்க்க சாஸ்திரநிபுணரான பேராசிரியர் ஜே. பி. எஸ். ஹால்டேன் அவர்கள்கூறி எச்சரித்திருக்கின்றார்.

**மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணை யில்லா விட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தூய கன்னிமை" என்னும் 12-ம் பத்திநாத பாப்பரசரது பொதுநிருபம்

(முன்தொடர்ச்சி)

இக்காரணங்களின் நிமித்தமே திருச்சபையானது தனது குருமார் விரதத்துவத்தை அனுசரிக்க வேண்டுமென்று அதி விவேகமாய்க் கற்பித்துள்ளது. ஏனெனில், அவர்கள் சருவேசுரனோடு மேன்மேலும் ஐக்கியப்படுவதற்கு அவசியமான ஞான அருள்களின் ஊறணியாக அது இன்றும் என்றும் இருக்கும் எனத் திருச்சபை நன்கு அறிந்திருக்கிறது.

மேலும், இன்னுமோர் வழுவையும் இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுதல் நன்றென எண்ணுகிறோம் குருமாரும் சந்நியாசிகளான இருபாலாரும் கற்புவாக்குத்தத்தத்தின்நிமித்தம் ஓரளவு மானிட சமூகத்திலிருந்து நீங்கிவாழ்வதினால், அவர்களுடைய உதவியையும் புண்ணிய மாதிரிகைகளையும் பார்க்க, இல்லறவாழ்வில் ஈடுபட்டு உலகில் மாந்தர் மத்தியில் சீவிக்கும் கிறிஸ்தவர்களின் உதவியும் புண்ணியமாதிரிகைகளுமே திருச்சபைக்குத் தற்போது மேலதிகமாகத் தேவைப்படுகின்றன என்று சிலர் அபிப்பிராயங்கொள்ளுகிறார்கள். அன்றியும், இவ்வபிப்பிராயத்தைச் சிறுவருடைய உள்ளங்களில் பதித்து, அவர்கள் குருமடத்திலோ அன்றேல் சந்நியாச ஸ்தாபனங்களிலோ சேர்வதைத் தடுக்கவும் முயலுகின்றனர். வந்தனைக்குரிய சகோதரரே, இவ்வபிப்பிராயம் எத்துணைத் தவறும் தீங்கும் உள்ளதென்று எவர்தானும் உணராமலிருக்க முடியாது.

கத்தோலிக்க மணவாளர் எந்த இடத்தில், எந்த நிலைபரத்தில் இருந்தாலும், தங்கள் கிறிஸ்தவ சீவியத்தின் முன்மாதிரிகையினால் தங்கள் புண்ணியத்திற்குச் சான்றாகச் சிறந்த இரட்சணியக் கனிகளை விளைவிக்கமுடியும் என்பது நாம் மறுக்கமுடியாத விஷயமே. ஆனால், இக்காரணத்தின் நிமித்தம், சருவேசுரனுக்குத் தம்மை முற்றாக அர்ப்பணம் செய்வதைப் பார்க்கிலும் இல்லறவாழ்வில் ஈடுபடுவதே சிறந்த காரியம் என வாதிப்போர் நீதிமுறையை முற்றாகப் புரட்டுகின்றனர் என்பதற்கு ஐயமில்லை. வந்தனைக்குரிய சகோதரரே, விவாக அந்தஸ்தைத் தெரிந்துள்ளோரும், தெரிவோரும் தங்கள் பிள்ளைகளைச் சிறந்த முறையில் வளர்க்கவும், தம் விசுவாசசாட்சியத்தினாலும் புண்ணிய மாதிரிகையினாலும் பிறருக்குத் தம்மால் இயன்ற உதவிபுரியவும் காத்திரமாய்க் கடமைப்பட்டிருக்கின்றனர் என்று நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று நாம் உண்மையாகவே விரும்புகிறோம். எனினும், இல்லறவாழ்வில் ஈடுபட்டுத் தாய்தந்தையராகித் தம் பகிரங்க கிறிஸ்தவப் புண்ணிய அனுசரணையினால் மேலான ஞானநன்மைகளை விளைவிக்க முடியுமென இளைஞர்களுக்குத் துர்ப்புத்திகூறி, அவர்கள் குருமடத்திலோ, சந்நியாச கூட்டங்களிலோ, அல்லது ஸ்தாபனங்களிலோ சேருவதையும் பரிசுத்த வாக்குத்தத்தங்களைச் செய்வதையும் தடுக்க எத்தனிப்போரை நாம் நம் கடமைப்படி கண்டியாதிருக்க முடியாது. இவர்கள், தேவ ஊழியத்திற்குத் தம்மை அர்ப்பணம் செய்ய ஆசிக்கும் மிகக்குறைவான வாலிபரையும் இளம்பெண்களையும் கன்னிமை வாழ்வில் ஈடுபடாது தடுக்க முயல்வதைப் பார்க்கிலும் இல்லறவாழ்வில் ஈடுபட்டிருக்கும் அதிதிரளானோரைக் கிறிஸ்தவர்கள் மத்தியில் இரட்சணியத் தொண்டுகளை வளர்க்கும்படி தமக்குரிய ஆர்வத்துடன் வற்புறுத்துவோராயின், இவர்களின் செயல் உண்மையில் திறமை வாய்ந்ததும் புகழ்ச்சிக்குரியதுமாயிருக்கும். இவ்விஷயத்தைப் பற்றி அர்ச். அமிர்தநாதர் பொருத்தமாகப் பின்வருமாறு கூறுகிறார்: "பூரண கற்பின் வித்தை விதைப்பதும் கன்னிமையின்மேல் வாஞ்சையைத்தூண்டி விடுவதும் குருத்துவத்தின் கடமையாக எப்போதும் இருந்துவந்துள்ளது." (De Virginitate C. 5. n. 26).

அன்றியும், பூரணகற்பு வாக்குத்தத்தம் செய்தோர் மானிட சமூகத்திலிருந்து ஏறத்தாழ விலகிஇருக்கிறார்கள் என்று சாற்றுதல் முற்றும் தவறென்று எச்சரிக்கை செய்தலும் அவசியமெனக் கருதுகிறோம். சாதி மதசமூக பேதமின்றி எளியோர், நோயாளர் என்போரின் சேவைக்குத் தங்கள் சீவியத்தை அர்ப்பணம் செய்யும் துறவற கன்னியர், அன்னாரின் துன்பதுயரங்களோடு நெருக்கமாய் ஒன்றித்து அவர்களின் அன்னையரைப்போல் அவர்கள் பால் பாசத்தால் இழுக்கப்படுகின்றனர் அல்லவா? இவ்விதமே, குருவானவர் திவ்விய கர்த்தரின் முன்மாதிரியால் தூண்டப்பட்டு, தன் மந்தைக்குச் சேர்ந்த ஆடுகளை நன்கறிந்து அவைகளை ஒவ்வொன்றாய்ப் பெயர்சொல்லி அழைக்கும் நல் ஆயனின் கடமையை ஆற்றுகிறார் அல்லவா? உண்மையில், குருமாரும் சந்நியாசசீவியத்தைக் கைக்கொண்ட இருபாலாரும் பூரண கற்பை அனுசரிப்பதின் நிமித்தமே தம்மை யாபேருக்கும் அர்ப்பணம் செய்யவும், எல்லோரையும கிறிஸ்துநாதருடைய அன்பினால் நேசிக்கவும் தூண்டப்படுகின்றனர். தியானச்சீவியத்தில் (Contemplative Life) ஈடுபட்டோரும் தம் செபங்களையும் பிரார்த்தனைகளையும் சருவேசுரனுக்குச் செலுத்துவதினால் மட்டுமல்ல, தம்மைப் பிறர் இரட்சணியத்தின் நிமித்தம் அவருக்குப் பலிப்பொருளாக ஒப்புக்கொடுப்பதினாலுமே திருச்சபைக்கு அதிகம் நன்மை விளைவிக்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் நாம் "Sponsa Christi" என்னும் அப்போஸ்தொலிக்க நிருபத்தில் விதித்த பிரமாணங்களைத் தழுவிப் பிறர்சிநேகக்கிரிகைகளுக்கும், இரட்சணிய சேவைகளுக்கும் தற்கால நிலைக்கேற்கத் தம்மை அர்ப்பணம் செய்யும்போது, அவர்களுடைய செயல்கள் உண்மையில் மிகவும் போற்றற்குரியனவாகும். அன்றியும், அவர்கள் மக்களின் ஞானவளர்ச்சிக்காக மேற்கூறிய இருமுறையில் உழைக்கிறபடியால் மனிதரோடு தொடர்பறறவர்களாய் வாழ்கின்றனர் என்று கூறுவதற்கு இடமேயில்லை.

## III. சாதனையை ஒட்டிய குறிப்புகள்.

வந்தனைக்குரிய சகோதரரே, இதுவரையும் கன்னிமையின் மகிமையைப் பற்றிய திருச்சபையின் போதனையை ஆராய்ந்தோம். இனி, அதன் சாதனையை ஒட்டிய சில விஷயங்களைக் கவனிப்போமாக.

### 1. பூரணகற்பு சாங்கோபாங்கத்திற்கு அவசியமில்லை

முதன்முதலாகப் பரிசுத்த கன்னிமை விவாகத்தைப்பார்க்கிலும் அதிசிறந்ததாகக் கருதப்பட வேண்டுமாயினும், கிறிஸ்தவ சாங்கோபாங்கத்திற்கு அது அவசியமானதென்று சாற்றுவதற்கு இடமில்லையெனக் குறிப்பிடல் அவசியம். ஒருவன் தனது கற்பைச் சருவேசுரனுக்கு அர்ப்பணம் பண்ணாமலும், புனிதசீவியத்தை உண்மையாய் அடைந்துகொள்ளலாம். பிரமாணிக்கமுள்ள இல்லறவாசிகளாய்த் திகழ்ந்து, ஏனைய தாய்தந்தையருக்குச்சிறந்த எடுத்துக்காட்டாகத்துலங்கி, திருச்சபையினால் பகிரங்கமாய் மகிமைப்படுத்தப்பட்ட தூய ஆடவரும் பெண்டிருமே இதற்கு நற்சான்றாக உளர். உண்மையில் கிறிஸ்தவ சாங்கோபாங்கத்தை அடைவதற்கு அயராது உழைக்கும் இல்லறவாசிகளைத் தற்போது காண்பதும் அரிதன்று.

அன்றியும், சர்வேசுரன் சகலகிறிஸ்தவர்களையும் தூய கன்னிமையை அனுசரிக்கும்படி கட்டாயப்படுத்துவதில்லை யென்று அர்ச். சின்னப்பர் பின்வரும் வாக்கியத்தினால் படிப்பிக்கின்றார். "கன்னியர்களைக் குறித்தோவெனில், கர்த்தர் எனக்குக் கட்டளை கொடுக்கவில்லை. ஆகிலும் ........ நான் அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்" (1 கொரி. 7, 25). எனவே, பூரண கற்பானது சுவிசேஷ சாங்கோபாங்கத்தையும், பரலோக இராச்சியத்தையும் இலகுவாயும் சித்திகரமாயும் அடைந்து கொள்வதற்கு "வரம்பெற்றவருக்கு" (மத். 19, 11) ஓர்உதவியாய் இருப்பதின் நிமித்தம், அதைத்தழுவுமாறு அவர்களுக்குப் புத்திமதிகூறப்பட்டிருக்கின்றது. எனவே, அர்ச். அமிர்தநாதர் நன்கு குறிப்பிடுவதுபோல் அது: "கற்பிக்கப்படவில்லை; ஆனால், காட்டப்பட்டுள்ளது" என்க (De Viduis C. 12, N. 72).

### 2. பூரணகற்புக்கு உதாரகுணம் அவசியம்

ஆகையால், முதன்முதல் கிறிஸ்தவர்கள் தம்மைப் பூரண கற்பினால் சருவேசுரனுக்கு நைவேத்தியம்பண்ணுமுன் முழுச் சுயாதீனம் உள்ளவர்களாய் இருத்தல் அவசியம். அதன்பின் சுபாவத்திற்கு மேலான அருளையும் உதவியையும் சருவேசுரனிடமிருந்து பெற்றுக்கொள்ளுதலும் அவசியம். இவ்வுண்மையை நம் தெய்வீக இரட்சகர் தாமே பின்வரும் வாக்கியத்தினால் படிப்பித்துள்ளார். "வரம்பெற்றவரேயன்றி வேறெவரும் இந்த வார்த்தையை உணரார்கள் ........ இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக்கடவன்" (மத். 19, 11—12). யேசுநாதரின் இத்திருவாக்கை அர்ச். எரோணிமூவர் ஆழ்ந்து சிந்தித்து எல்லோருக்கும் பின்வருமாறு புத்திபுகட்டுகின்றார்: "தான் கன்னிமையின் விதிகளை அனுசரிக்க முடியுமோவென்று ஒவ்வொருவனும் தன்சுயபெலனை ஆராய்ந்து அறிவானாக. ஏனெனில், கற்பானது தன்னிலே தானே யாவருக்கும் வசீகரமும் கவர்ச்சியுமுள்ள ஒரு பொருளாக விளங்குகின்றது. ஆனால், ஒவ்வொருவரும் தத்தம் சக்தியை ஆராய்ந்துபார்த்து, அதை ஏற்றுக்கொள்ள வல்லபராய் இருப்பின், அதை ஏற்றுக் கொள்ளக்கடவர். கர்த்தரின் வாக்கியமானது தம் போர்வீரர் கற்பின் சன்மானத்தை அடைந்துகொள்ளும்படி அவர்களுக்கு உற்சாகமூட்டும் நன்மொழியா

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலைக்கப்பட்ட கறுப்பங்கி

— 'மைனு' —

**( தான் குறிப்பிட்ட இரையைத் தேடிப்பாய்ந்தது கர்ச்சிக்கும் சிங்கம், ஆனல், அகப்பட்டதும், சிரணிக்கப்பட்டதும் வேருென்று.)**

அன்று மாலைநேரம். ருஷியாவில் ஓர் சிறுகிராமம். அதன்பெயர் ஷதாஜாய். அக்கிராமத்தின் ஒதுப்புறமாக ஓர் உயர்ந்த கட்டிடம். அதனுள்ளிருந்து கும்மாளமும், கூச்சலும் கேட்டன. குடியும், கூத்தும் கொட்டமடித்தன. கிறெம்லினின் இரகசியப்பொலிஸ் கப்ரின் ஸோலான்ஸ்கி பெரியதோர்காரியத்தைச் சாதித்துவிட்டவன்போல் வீறுப்புடன் வீற்றிருக்கிறான். தன்னுடைய பகுதியில் ஒருகுருவானவர்கூட இல்லையென்று இறுமாப்புடன் கிறெம்லினுக்குத் தகவல் தெரிவித்துவிட்டான். ஆனல், அவன் அவ்வாறு நினைத்தது தவறு. அங்கு ஒருவர் இருந்தார்.

பளபளக்கும் சப்பாத்துகள் அணிந்த தனது கால்களின்அடியில் மதத்தைப் போட்டு நசுக்கித் துவைத்து நாசமாக்கிவிட்டதாகக் கனவுகண்டு கொண்டிருந்தான் கப்ரின் ஸோலான்ஸ்கி. தேவாலயங்களிலிருந்த சித்திரக் கண்ணுடிக்கதவுகள், மற்றும் தேவாராதனைக்கு உதவும் உபகரணங்கள் அனைத்தும் எடுத்துக்கொண்டு போகப்பட்டன. அதே சமயத்தில் பாமரமக்களாகிய கிராமவாசிகளுக்கு மதமானது ஓர் மனப்பிராந்தியெனப் போதிக்கப்பட்டது.

ஆனல், கிராமவாசிகளோ தங்களுக்குத் தேவையானவற்றைத் தந்தருளிய தேவனுக்குத் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்தார்கள். வேதகலாபனையினுல் தங்களுக்குஏற்பட்ட வறுமை, பிணி, துன்பம் முதலியவற்றிற்காகவும் ஆண்டவரைத் துதித்தார்கள்.

அன்று மேசைமேல் ஒய்யாரமாகக் கால்களைப் போட்டுக்கொண்டு ஓர்சுருட்டைப் புகைத்து ரசித்துக்கொண்டிருந்தான் ஸோலான்ஸ்கி. தனக்கு வந்த கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்த அவன் மஸ்கோவிலிருந்துவந்த ஒருகடிதத்தைப் பார்த்ததும், சட்டெனத் தன்கால்களை மேசைமீதிருந்து இழுத்துக்கொண்டான். அதிலே அவனுக்கு வெகு அருகாமையிலேயே ஒருகத்தோலிக்க குருவானவர் இருப்பதாகவும், உடனே அவரைக் கண்டுபிடிக்கும்படியாகவும் எழுதப்பட்டிருந்தது.

அவர் யார்? எப்படி இருப்பார்? எவரால்லும் சொல்லமுடியவில்லை. கப்ரின்தானே சுயமாகக் கிராமவாசிகள் ஒவ்வொருவரையும் விசாரித்துப் பார்த்தான். எவருமே எதுவும் பேசாமல் பதுமைகளைப்போல் இருந்துவிட்டனர். நாளுக்குநாள் ஸோலான்ஸ்கியின்கண்களில் குரூரம் வளர்ந்து கொண்டுவந்தது.

ஒரு தினம். அப்போதுதான் ஓர் கூரைக்கொட்டிலில் திவ்வியபூசை கண்டுவிட்டுத் திரும்பிவந்த விசுவாசிகளின்மீது மோதிக்கொண்டான் பொலிஸ்காரன் ஒருவன். இதைத் தெரிவிக்கும்படியாய்த் தலைதெறிக்க ஓடினுன் தலைவனிடம். வேட்டையாடும்படலம் ஆரம்பமாயிற்று.

கிராமத்தின் ஓர்வீதி. அவ்வீதியில் பழங்காலத்து வீடொன்று இருந்தது. டக், டக்கென்று கதவைத் தட்டும் ஓசைகேட்கிறது. வயதான ஓர் கிழவர் கதவைத் திறக்கிறார். கதவைத்தட்டிய ஆளைக் கூர்ந்து நோக்குகிறார். வந்த ஆள், "நான் வந்துவிட்டேன், இங்கு கொஞ்ச நேரந்தான் இருப்பேன்" என்றார்.

"ஐயோசுவாமி! இல்லை, இப்போது வேண்டாம்; இங்கு கூடவே கூடாது; அவர்கள் வந்தால் கண்டுபிடித்து விடுவார்கள்" எனக் கூறிக்கொண்டே "சரி, வாருங்கள் சுவாமி, உள்ளேவாருங்கள்" என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனார் தாத்தா மிக்கேல். பசிமிகுதியால் சுவாமியார் தாத்தா கொடுத்த றொட்டியையும், தேநீரையும் அருந்திவிட்டுப் பின்னர் சற்றே தென்புடன் குறுநகை புரிந்தார்.

"இரண்டு நாட்களின்பின் கிடைத்த இந்த உணவிற்காக நான் மிகவும் நன்றியறிந்திருக்கிறேன்; இனிநான் என்வழியே செல்வது நலமாயிருக்கும்; எனக்காகச் சிலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் என்னை இங்கே கண்டுபிடிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய ஆசை; நான்......"

சுவாமியார் முகத்தில் தோன்றிய புன்னகை மறைந்தது. உற்றுக் கேட்டார் மிக்கேல்தாத்தாவும்.

"சீக்கிரம்! அவர்கள் வருகிறார்கள்; உங்கள் பின்னாலேயே அவர்களும் வந்திருக்கவேணும்; பக்கத்தறையிலிருக்கும் கட்டிலுக்கடியில் ஒளித்துக்கொள்ளுங்கள்; நான் அவர்களைப் பார்த்துக்கொள்ளுகிறேன்; உம்... உங்கள் அங்கியை இங்கே கொடுங்கள்; அதை ஒரு நல்ல இடத்திலே மறைத்து வைக்கிறேன்; ஒன்றும் பேசாதீர்கள்; சீக்கிரம் போங்கள் சுவாமி!"

குருவானவர் தமது மேல்அங்கிக்குள் வைத்திருந்த நைந்துபோன கறுப்பு அங்கியை எடுத்து மிக்கேல் தாத்தாவிடம் கொடுத்துவிட்டு அடுத்தஅறைக்குள் போய்விட்டார். ஸோலான்ஸ்கியின் சப்பாத்துச் சப்தம் நெருங்க நெருங்க அவசரம் அவசரமாகத் தாத்தா எழுந்து, சுவாமியார் தேநீர்குடித்த கோப்பையை எடுத்து வேறிடத்தில் வைத்துவிட்டுச் சிறிதுநேரம் கடுமையாக யோசித்துக்கொண்டிருந்தார். திடீரென அவர் கண்களில் சிறிது பிரகாசம் தோன்றியது.

கண்களில் குரூரம் தாண்டவமாடக் கதவைக் கப்ரின் காலால்உதைத்துத் திறந்தான். "பிடியுங்கள் அவனை" என்று கத்தினுன் ஸோலான்ஸ்கி. அங்கே மரியன்னையின்படமொன்றின் இருபுறமும் இருவர்த்திகள் எரிய, அதன் முன்பாகக் கறுப்புஅங்கி தரித்த ஓர் வயோதிக உருவம் முழந்தாளிலிருந்து வேண்டிக்கொண்டிருந்தது. கப்ரினின் கட்டளையைக் கேட்ட படைவீரர்கள் திமுதிமென்று உள்ளே நுழைந்து, அந்த வயோதிகரைப் பிடித்துக் கட்டினார்கள்.

"ஏய் சாமியாரே! உன் கடைசிப் பிரார்த்தனை இதுவாயிருக்கட்டும்; உன் ஆயுசு இன்னும் பத்து நிமிஷந்தான்."

பின்னர் படைவீரர் அவரை ஓர் வயலில் கொண்டுசென்று நிறுத்தியபோது, கப்ரினைப்பார்த்துப் புன்னகை பூத்தார் அவ்வயோதிகர். தாம் அணிந்திருந்த கறுப்பு அங்கியைப் பலகுண்டுகள் துளைத்துக்கொண்டு தமது சரீரத்தில் பாயும்போதுதானும் அவர் புன்னகை பூத்தவாறே இருந்தார்.

ஒருவாரத்திற்குப்பின் சுவாமியார் தமது ஞானமக்கள் மேய்ப்பனில்லாது மிரண்டு சிதறுண்டு போகாதிருக்கத் தன்னுயிரைத் தத்தம் செய்த தியாகவீரனின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் திவ்வியபூசைப் பலி நிறைவேற்றினார். பூசைமுடிந்ததும் சுவாமியார் பனிபெய்துகொண்டிருந்த அந்த அதிகாலை வேளையிலேயே நழுவிவிட எத்தனிக்கையில், மரியம்மாள் என்னும் ஓர் வயோதிகப் பெண் அவரை அணுகி: "சுவாமி, மிக்கேல் தாத்தாவுக்கு எவ்வளவு தைரியம்! அவர் உங்களை றொம்ப நேசித்தார் இல்லையா?" எனக் கேட்டாள்.

காலைநேர இளம்வெயிலைச் சுறுசுறுப்பாகவும், கடுமையாகவும்மாற்றிக்கொண்டிருந்த செங்கதிரோன் உதிக்கும் திசையிலிருந்த மலைகளுக்கப்பால் தமதுபார்வையைச் செலுத்திக் கண்ணீர்நிறைந்த கண்களுடன் சுவாமியார், "ஆமாம் மரியா, நான் மிக்கேலை அதிகம் நேசித்தேன்...... இதோபார்! அவர் யார் தெரியுமா? அவர்தான் என்னைப் பெற்றெடுத்த தகப்பன் என்றார்.

— முன்னேடி

# முகமாலை அர்ச். பிலோமினம்மாள் பேரில் ஐம்மணிமாலை

விருத்தம்

உயர்வளர் தெங்கஞ்சோலை யுறுமுக மாலையூரில்
அயர்வது உமக்குநல்ல ஆனந்த மென்றுகண்டோ
பெயர்பெறு சுவாமி. ஞானப் பிரகாசர் முன்னுள்ஆங்குக்
கயலரு கதனில்நிற்கோர் கோவிலும் ஆக்கித்தந்தார்

●

ஆங்கிருந் தருளேவீசி ஆவணித் திங்கள்தோறும்
தேங்கியே வழியும்பக்தர் தேவைகள் எல்லாம்கேட்டு
ஏங்கியே வாடிடாது ஏற்றநல் வரங்களீவாய்
ஈங்கிதைப் பகர்ந்துமென்ன இச்சணம் வாரேன்அம்மா

●

கன்னியே பிலமினம்மா கதியினி எனக்கார்வேறு
நின்னையே பணிந்துநோகும் நினதடி யானைப்பாரும்
என்னையே கெடுக்கத்தேடும் எரிநர கலகையோட்ட
அன்னையாம் தேவதாயோ டடியனைக் கண்பாரம்மா

●

பெற்றவர் பிறந்தோர்சுற்றம் பேருல கிருந்துமென்ன
நற்றிறத் தவத்தோர்வந்தென் நலிவெலாங் கேட்டுமென்ன
கற்றவர் கல்விநீதி கதிக்கவே புகட்டியென்ன
உற்றவர் உம்மைப்போலும் உலகினில் உண்டோ ! உண்டோ !

●

இனிவரும் ஆண்டுதோறும் இப்பதி மறவேனம்மா
நனிவரும் உலகமாயை நெஞ்சினில் நாடாதம்மா
கனிதரும் சர்ப்பம்வைத்த கண்ணியில் சிக்கேன்அம்மா
தனிவரம் எனக்குண்டென்று சகமெலாம் நாதம்செய்வேன்

மிருசுவில் K. K. S.

## சந்தானுள்மாதா திருநாள்

### மாளிபொட

ஆடிமாதம் 20-ந் திகதி 5 மணிக்குக் கொடிமரம் ஏற்றப்பட்டு நவநாள் உற்சவம் ஆரம்பமாகியது. தினசரி மாலை 6 மணிக்குச் செபமாலை செபித்தபின் பிரசங்கமும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றன. 25-ந் திகதி தொடக்கம் 28-ந்திகதிவரை விசேஷ ஞானஒடுக்கம்ஒன்று இந்தியாவின் விசுவாசப்பரப்புதற் தேசியதலைவரான வண. ஐ. சாமா, S. J. சுவாமியவர்களால் போதிக்கப்பட்டது. ஆடி 28-ந் திகதி ஐந்துகுருமார்சமேதராய் வேஸ்பர்பாடியதும், அழகிய பொன்ரதத்தில் சந்தானுள்மாதாவின் திருச் சுரூபம் தெருவினூடே ஊர்வலமாக மிக்கபயபக்தியுடன் பாடல், செபமாலை, பான்ட் வாத்தியத்துடன் எடுத்துச்செல்லப்பட்டது. ஆடிமாதம் 29-ந்திகதி காலை 6, 6-30, 7-30 மணிக்குத் தனிப் பூசைகளும், காலை 8-00 மணிக்குக் காலி மேற்றிராணியாரான மகாவந். என். எம். லௌதாதியோ, S. J. ஆண்டவர் வரவேற்கப்பெற்று, அவரால் 9-00 மணிக்குப் போந்திபிக்கல்பாடற் பூசையும், இதனைத்தொடர்ந்துஉறுதிபூசுதலும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் நிறைவேறின. பின்னர்அன்னதானம் ஆயிரத்துக்கதிகமான மக்களுக்கு வழங்கப்பட்டுத் திருநாள்முடிவடைந்தது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## குருடரான இருசகோதரர்கள்

முற்றாகவேகுருடராய் இருந்தபோதிலும் அதையிட்டு மனந்தளராது லண்டன்நகரிலே புல்ஹாம்வீதியிலுள்ள சேர்வித்தகோவிலில் அநேகவருடகாலம் முற்றுமேபூரணமாகக் குருத்துவதொண்டாற்றிவந்த வண. லேயோகிறுற்றிசுவாமியார் தமது 86-ம் வயதிலே சமீபத்தில் காலஞ்செல்லலாயினர். இவரின் சகோதரரான வண. பீற்றர் கிறுற்றிசுவாமியார் குருப்பட்டம்பெற்றுச் சிறிதுகாலத்தின்பின் தமதுகண்பார்வையை இழந்தபோதிலும் அநேகவருடகாலம் வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராசனத்தில் ஓர்குரவராயிருந்து தொண்டாற்றிவந்தார். முந்தியவர் 1913-ம்ஆண்டு தமதுகண்பார்வையை இழந்தபோது, நோவிஸ்மாஸ்றராகக் கடமைபார்த்தும், பாவசங்கீர்த்தனங் கேட்டும், பிரசங்கஞ்செய்தும், மனந்திரும்புவாருக்கு வேதசத்தியங்களைப் படிப்பித்தும்வந்தார். தேவதாயாரின் நேர்த்திப்பூசையையே இவர்தினமும் நிறைவேற்றிவந்தார். மனப்பாடமாயிருந்த இப்பூசையை அவர் ஏறக்குறையச் சீவியத்தின் கடைசிகாலம்வரை தப்பாதுநிறைவேற்றிவந்ததுடன் தமது குருத்துவ வைரயூபிலியைக் கண்டுகளிக்கும அதிர்ஷ்டத்தைப் பெற்றுமிருந்தார்.

## போலாந்தின் கலைப்பொக்ஷங்கள்

இரண்டாவது உலகயுத்தத்திலே சுயநாட்டைவிட்டு வெளியேறிய போலிஷ்அரசாங்கம் 2 கோடியே 10 லட்சம்பவுண் பெறுமதியுள்ள போலாந்தின் மதிக்கதற்கரிய அபூர்வபொக்ஷங்களையும் தன்னுடன் பிரித்தானிதேசம் கொண்டுசெல்லலாயிற்று. அதுபிந்தக் கனடாவுக்குக் கப்பலிலேற்றி அனுப்பிவைத்த இந்தப் பொக்ஷங்கள் அங்கு குவெபெக்மாகாண நூதனபொருட்காட்சிச்சாலையின் நிலவறையில் இன்றுவரைசேமமாய் இருந்துவருகின்றன. இந்தப்பொக்ஷங்களில், அர்ச். மோறிஸின் ஈட்டியும்ஒன்றாகும். நமது திவ்வியகர்த்தரின் திருவிலாவைக்குத்தி ஊடுருவியஈட்டியென இது உலகப்பிரசித்திபெற்றது. இந்தப் பொக்ஷங்களையெல்லாம் திரும்ப அனுப்பிவைக்குமாறு தற்சமையம் போலாந்தில் ஆட்சிபுரிகின்ற போலிக்கம்யூனிஸ்தஅரசாங்கம் முன்னொருமுறை கனடியஅரசாங்கத்தைக் கேட்டுநின்றது. ஆனால், அதன்கேள்விக்குக் கனடியஅரசாங்கம் செவிசாய்க்கவில்லை. அதனால், சமீபத்திலே மற்றுமோர்தரம் அதுகேட்டுக்கொண்டபோது, குவெபெக்மாகாண பிரதமரான திரு. மோறிஸ் டுப்பிளெசிஸ் அவர்கள் இறுத்தபதிலிலே: "நமது அரசாங்கத்தாலே பாதுகாத்துப்பாரமரிக்கப்படுகின்ற இந்தக் கலைக்களஞ்சியங்களைப் போலாந்துக்குத் திரும்பவும் அனுப்பிவைக்கும்விஷயமாய்ப்போலாந்தின் இழிவான கம்யூனிஸ்த அரசாங்கத்துடன் எவ்விதபரிமாற்றமோ, அல்லது உடன்படிக்கையோ, அல்லது வேறுபாடுதீர்த்துச் செய்யும் இணக்கமோ ஒருகாலுமே செய்யப்படமாட்டாது; இந்தக் களஞ்சியங்கள் குவெபெக் மாகாண நூதனபொருட்காட்சிச் சாலையில்சேமமானபாதுகாப்பில் இருந்துவருகின்றன" எனக் கூறியிருக்கின்றார்.

## பெரோனின் திருவிளையாடல்

ஆர்ஜென்ரினாவிலே ஜெனறல் பெரோன் தனதுசர்வாதிகார ஆட்சிகாலத்தில் தன்னுடையஎதிர்க்கட்சியினரையும்,எதிரிகளையும்தானாகவே அடக்கியொடுக்கிவைத்த சம்பவம்ஒன்று சமீபத்தில் நடைபெற்ற விசாரணைஒன்றின் மூலம் வெளியாகியிருக்கிறது. அந்நாட்டின் கத்தோலிக்க தினவர்த்தமானியான "எல்புவேபிளோ" எனும்பத்திரிகையை ஒழித்துக்கட்டுமாறு முந்த அவர் அதனைமுகாமையாகநின்று நடத்திவந்ததலைவரைத் தொலைத்துவிட முயன்றார். இதிலேஅவர் படுதோல்வி அடைந்ததும், துவேஷங்காரணமாகத் தானாகவே அவரைத்துன்புறுத்தத் தொடங்கினார். அத்துடன் அரசாங்கம் அப்பத்திரிகையை அச்சிடுமாறு வழங்கிவந்தகடுதாசிப்பங்கீட்டை நிறுத்திவிடவுஞ்செய்தார் அதனால்பத்திரிகை அச்சிடுவதற்குத் தொகையான கடுதாசியை இருட்டுச்சந்தையில் அத்துணை உயர்ந்தவிலைகொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவே பணநெருக்கடி உண்டாயிற்று. இந்தநிலைமையிலே பணியாளருக்கும், பிறருக்கும் சம்பளம்கொடுப்பது தாமதமாயிற்று. அப்போது தருணம்பார்த்திருந்த பெரோன் உடனே இதுவிஷயத்தில் தலையிட்டு அப்பத்திரிகையைப் பிரசுரிப்பதை நிறுத்திவிட்டார். அவரின்திருவிளையாடல் இவ்வாறாக, தற்போதைய ஆர்ஜென்ரின அரசாங்கம் "எல்புவேபுளோ" பத்திரிகைக்கு 2,10,000 பவுண கடனைக்கொடுத்து உதவிசெய்து அதுதிரும்பவும் பிரசுரமாகும்படி செய்திருக்கிறது.

## 74 வயதில் குருப்பட்டம்

டக்றர் லெயோனார்ட் ஆட்லர்என்ற 74வயதுடைய பிரபலஎஞ்சினியர் சமீபத்திலே இத்தாலியதேச மிலான்நகரில் பிரான்சீஸ்குவின் சந்நியாசசபை வார்த்தைப்பாடுகள் கொடுத்துக் குருப்பட்டம் பெற்றுக் கொண்டார். இத்திருச்சடங்கின்போது 98வயதுள்ள அவருடைய தாயாரும் விஜயம்செய்திருந்தார். இவர் பிரான்சீஸ்குவின் சபைக் குருவாகிறதற்குப் பாப்பரசரிடமிருந்து விசேஷ விதிவிலக்குப் பெறவேண்டியிருந்தது. ஏனெனில், இவருடைய முதிர்ந்தவயது ஒருபுறமிருக்க இவர் விவாகமானவர். இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். ஒருமகன் கப்புச்சின்சபைக் குருவானவர். மற்றொருமகன் விவாகமானவர். மகள் ஆசிரியையாயிருக்கிறார். டக்றர் ஆட்லர் அவர்கள் பிறப்பில் யூதர். யூதமதத்தைவிட்டுப் புரொட்டஸ்தாந்தசமயத்தைத் தழுவிப் பின்னர் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்தவர். இவர் சிவில் எஞ்சினியரிங் பயின்று, உயர்தரப் பரீட்சையில்தேறி ஜேர்மனியின் தலைப்பட்டணமாயிருந்த பேர்ளின்நகரிலே மின்சாரக் கம்பெனியில் திறும்வே பிரிவின் பிரதமஎஞ்சினியராகவும், தலைவராகவும் இருந்தவர். பின்னர் போக்குவரத்துப்பகுதி முழுமைக்குமே இவர் பிரதம எஞ்சினியராக இருந்துவந்தார். ஜேர்மனி நாஸிகளின் ஆதிக்கத்தில் வந்தபோது இவர் ஜேர்மனியிலிருந்து தப்பித்து இத்தாலியை அடைந்து மிலான்நகரில் திறும்வேப் பகுதியின் தலைவரானார். 1952-ம்ஆண்டு இளைப்பாற்றி எடுத்துக்கொண்டார்.

## உப்புவாணிபன் அறிவானு?

ஆஸ்திரியாவிலே ஆல்ற்றென்பேர்க் நகரிலுள்ள பழையசந்நியாச ஆச்சிரமத்தில்வைத்துப் பாதுகாக்கப்பட்டுவந்த விலையேறப்பெற்ற புராதனநூல்களின் பக்கங்களும், ஹேய்டன்என்ற பிரபலகவிஞரால் இயற்றப்பட்டசங்கீத கையெழுத்துநூலின்பக்கங்களும் அந்நாட்டினைச் சோவியற்ருஷியா ஆக்கிரமித்திருந்த காலத்திலே அந்தஆச்சிரமத்தில் நிறுத்தப்பட்டிருந்த ருஷிய போர்வீரர்களால் தீமூட்டுவதற்குப் பாவிக்கப்பட்டிருப்பதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்தஆச்சிரமகட்டடம் இதற்குமுன் ஜேர்மன்போர்வீரர்களால் உபயோகிக்கப்பட்டுவந்தது. சென்றவருடஇறுதியிலே ருஷியர்கள் ஆஸ்திரியாவைவிட்டு வெளிகொண்டபின் சந்நியாசர்கள்இந்தஆச்சிரமத்துக்குத் திரும்பிச்சென்றபோது, அங்கிருந்த அபூர்வ சித்திரப்படங்களையும், மடாதிபர்களின் பிரதிமைப்படங்களையும் கைத்துப்பாக்கிப் பயிற்சி இலக்காக ருஷியபோர்வீரர்கள் பிரயோகித்திருக்கக் கண்டார்கள். இன்னும்அங்கிருந்த பூசைவஸ்திரங்கள்ஆதியவற்றைத் தாங்கிகளை எண்ணெயிட்டுத் துப்பரவுசெய்யும் கந்தைகளுக்குப்பதிலாக அவர்கள் உபயோகித்திருக்கிறார்கள். சரித்திரபூர்வமான வீட்டுத்தளபாடங்களும், அணிகலங்களும், சித்திரகொத்துவேலைப்பாடுகளும், மற்றும்பொக்ஷங்களும் தீஅணையாதுஎரியும்படிவிறகாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. 15 வருடங்களின்பின் தற்போது இந்தஆச்சிரமம் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பெற்று மறுபடியும் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. உப்புவாணிபன் அறிவானு கற்பூரத்தின் அருமையை?

---

## சந்தானுள் திருநாள்

### ஆனையிறவு

யாத்திரை ஒன்றுக்குச் சென்ற 28-7-56 சாயந்தரம் வரும்படி சந்தானுள்மாதாவின் பக்தர்ஒருவர் என்னை விரும்பியழைத்தார். பலதடைகளையும் மேற்கொண்டு உடனே தானே யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட விசேஷபஸ்ஒன்றில் பக்தர்கள் பலருடன் ஆனையிறவுசென்றேன். அங்கே ஆனையிறவுப் பாலத்துக்கும், அதனையடுத்த உப்பளத்துக்குமிடையே எழுந்தருளியிருக்கும் சந்தானுளின் கோவிலைநோக்கிப் பக்தர்குழாங்கள் அணியணியாகச்சென்றன. மனிதசஞ்சாரமற்றவனுந்தரம்போன்று காணப்பட்ட அவ்விடம் யான்சென்ற ஒருசிலமணிநேரத்துள் சிறியதோர்பட்டினமாகக் காட்சியளித்தது. அதேவேளை ஆனையிறவுஉப்பளத்தில் பணியாற்றும் உத்தியோகத்தரும், தொழிலாளரும், யாழ்ப்பாணம், கிளிநொச்சிஆதியாம் பலவிடங்களிலிருந்துவந்த யாத்திரிகர்கள்பலரும் அங்குகுழுமிநின்ற காட்சி மிகமாட்சியாயிருந்தது. உவர்பொலிந்த அப்பூமியிலே மக்களின் தேவைக்குப்போதிய நன்னீர்இருந்தது. கோவில்சிறிதாயிருந்தபோதிலும் அதன்உள்ளும்புறமும் இயற்கைமலர்கள், பலநிறத்துவசங்களால் அலங்கரிக்கப்பெற்றுச்சோபிதமுற்றுவிளங்கியது.

மாலை 7 மணிக்கு ஆராதனைதொடங்கியது. செபமாலை பிரார்த்தனையின் பின் மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரமாக அயலிலிருந்த லூர்துகெபியைப் பக்தர்கள்அடைந்ததும, அதன்முன்பாக அழகியபந்தரின்கீழ் யாழ்ப்பாண மேற்றிராசன பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரர் அதிவண. ரி. எ. ஜே. மதுரநாயகம்சுவாமியவர்கள். "தாயை நேசிக்கவோ, மகளை நேசிக்கவோ" என்பதைப் பீடிகையாகக்கொண்டு, இத்திருநாள் ஏககாலத்தில் சந்தானுள் மாதாவையும், தேவமாதாவையும் பக்திபண்ண வசதியளிக்கிறது என்னும் பொருள்பட ஓர்அரிய பிரசங்கஞ்செய்தார். பின்னர் லூர்துமாதாவுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும் செபம் தமிழிலும், சிங்களத்திலும் சொல்லப்பட்டது. சுற்றுப்பிரகாரம் மறுபடி கோவிலையடைந்ததும், வண. ஜே. செல்வரட்ணம் சுவாமியவர்களால் வேஸ்பர்பாடப்பட்டுத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவுற்றது. திருநாள் பாடற்பூசையைக் கிளிநொச்சி அனுதபாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் வெகுவாகச்சிறப்பித்தார்கள். திருநாள்சங்கீத சிறப்புப்பெற்றது, திரு. கே. டி. யுசே அப்புஹாமிஅவர்கள் தலைமையில் யாழ்ப்பாணக குருமடத்து மாணவர்களாலேயாம். இன்னும் உப்பளக் கிறீஸ்துவர்களால் சமுகமளித்தவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. முடிவில் கட்டளைக்குரவர் வண. ஜே. செல்வரட்ணம் சுவாமியவர்கள் திருநாளைச் சிறப்பாக நடத்திவைத்த யாழ்ப்பாணம், எம். எஸ். கிளப் அங்கத்தவர்களுக்கும், உப்பளத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர், தொழிலாளருக்கும் நன்றிதெரிவித்து, அவர்கள் சந்தானுள்மாதாவின் அனுக்கிரகத்தைப் பெறுவது மாத்திரமல்ல, பிறசமயிகள்மத்தியிலுள்ள இந்தக் கோவிலைச் சிறப்பிக்கச் சமுகமளித்தமையால் சமயஅபிவிருத்திக்கு அதிகம் உதவிசெய்கிறவர்கள் ஆவார்களுமெனக் கூறிமுடித்தார்.

— நிருபர்

---

● கம்யூனிஸ்தஆட்சியிலுள்ள ஹங்கேரியிலே ஒருசிலகுருமார்மாத்திரமே இன்னும் சிறைச்சாலையில் இருந்துவருவதாக வியென்னா நகரில் செய்திகிடைத்திருக்கிறது. வாக்ஸ்எனுமிடத்திலுள்ள சிறைச்சாலையிலிருந்து பதினொருகுருமார் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். சிறைச்சாலையின் நிலைமைகளைப்பற்றிய தகவல்கள் யாதும் வெளியிட்டால் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்று எச்சரித்துத்தான் அவர்கள் விடுதலைசெய்யப்பெற்றார்கள்.

● பம்பாய்நகரின் பிரபல டக்றர்மாருள் ஒருவரான டக்றர் அரிஸ்டைடிஸ் மெனெஸெஸ் அவர்கள் ஆந்தெரியிலுள்ள 'விநயாலயா' என்ற யேசுசபைக் குருமடத்தில் சேர்ந்துள்ளார். இவர் வைத்தியத்துறையில் பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்தியவர். இவர் உலகிலேயே இருந்திருந்தால் சிலவருடங்களுள் பம்பாய் இராச்சியத்தின் மிகப்பிரபல டக்றர்மாருள் ஒருவராக விளங்கியிருக்கக்கூடும். ஆயினும் அதைவிட உயர்ந்த அந்தஸ்தைத் தெரிந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னமடுத் திருநாள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க யாத்திரைத்தலங்களுள் சாவணைச்சின்னமடுச் செபமாலைநாயகியின் சேத்திரமும் ஒன்ருகும். இங்கே வருடாந்ததிருநாள் சென்ற 27-7-56 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நோவனைகள் பக்திச்சிறப்பாக நடைபெற்றன. சென்ற 4-8-56 சனிக்கிழமை மாலை ஆராதனையின்போதும், மறுநாள் திருநாட்பூசையின்போதும் யாழ்ப்பாண, தீவுபகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானபக்தர்கள் ஆலயமைதானத்தில் நிறைந்திருந்து தேவஅன்னைக்கு அஞ்சலிசெய்தார்கள். பிறசமயமக்களும திரளாகவந்து அன்னையின் அருளை இரந்துநின்ருர்கள். விக்கார் ஜெனறலான மிகவண. எச். லெக்குத்தூர்சுவாமியவர்கள் வேஸ்பர் பாடினுர். மறுநாள்காலை ஞாயிற்றுக்கிழமை திருநாட்பாடற்பூசை பாசையூரின்முதற்குரவர் வண. எம். பி. இராயப்புசுவாமியவர்களால் நிறைவேறியது. வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்கள் பனிமயமாதாவின் வரலாற்றையும், தேவதாயாரின் அருட்பிரவாகத்தையும், தமது அடியார்களுக்கு அவசெய்துவரும் உபகார சகாயங்களையும் எடுத்துக்காட்டி அரியதோர் பிரசங்கம்செய்தார். அதன்மேல் மாதாவின்திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் திருநாள் இனிதே முடிவாயிற்று. யாத்திரிகர்களின் பிரயாணம் நெருக்கடியின்றி நடைபெறத்தக்கதாய்த் தீவுப்பகுதிப் பஸ்கம்பனியார் அநேகபஸ்களை ஓடவைத்துவசதியளித்தமை பாராட்டத்தக்கதே.

— நிருபர்

---

புத்தக மதிப்புரை

## "நித்திய சீவியம்"

### (A Catechism on Eternal Life)

ஆக்கியோன்— **வண. B. வில்லியம் யேசுதாசன். O. M. I. சுவாமிகள்.**

விலை—பிரதி ரூபா **2-00.**

**கிடைக்குமிடம்:** அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.

"ஏகமெய்யான கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய யேசுக்கிறீஸ்துவையும்,பிதாவிடமிருந்து நான் அனுப்புகிற பரிசுத்த ஆவியையும் அறிந்துகொள்வதே நித்தியசீவியம" எனும் சுவிசேஷதிருவாக்கை விருதுவாக்கியமாகக்கொண்டு வெளிவந்துள்ள இந்தஅருமையான நூலைக் கத்தோலிக்கதமிழ்உலகம் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்குமென நம்புகிறேம். ஏனெனில், இந்நூலின் நாமத்திலிருந்தே இதன்காத்திரம் எம்மாத்திரம் என்பதை இனிதேதெளிந்துகொள்ளலாம். விளங்குவதற்கும், விளக்குவதற்கும் கஷ்டமானவிஷயங்களை வினுவிடைரூபமாகத் தெளியப்பண்ணுவது அருமையும், பழமையுமான ஓர் நல்லமுறையாகும். நமது ஞானேபதேசப் புத்தகங்களிலும், பாடப்புத்தகங்களிலுள்ள சிலபாடங்களிலும், மற்றும் பலவைதிக, லௌகிக நூல்களிலும் இதனைக்காணலாம். ஆக்கியோனும் "ஏன் புதியவினுவிடை? என்பதில் வெள்ளிடைமலைபோல் இதனைநன்ருக விளக்கியிருக்கின்ருர். திரிஏக சர்வேசுரன் நித்தியசீவியம், பிதா நித்தியசீவியத்தின் உற்பத்தி, சுதன் நித்தியசீவியத்திற்கு நடுவர், ஆவி நித்தியசீவியத்தை நிறைவேற்றுபவர், தேவகிரியைகள், செயற்பிரசாதங்கள், திவ்விய அனுமானங்கள், புண்ணியங்கள், உரிமைகள், கத்தோலிக்க ஆராதனை, போதனை, சரித்திரங்களின் ஒப்புமை என்பனவெல்லாம் இலகுவாக இதிலே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. ஞானேபதேசம் படிப்பிக்கும் குருமார், ஆசிரியர், உபதேசிமார் முதலானேருக்கு மாத்திரமல்ல, வேதஅறிவை விருத்திசெய்துகொள்வதில் கத்தோலிக்கமக்கள் எல்லோருக்குமே இஃது ஓர்சிறந்தநூலாகும். கொழும்பு அதிமேற்றிராணியார் இதனைப்பாராட்டி எழுதியனுப்பிய திருமுகத்திலே குறிப்பிட்டிருப்பதும் நாமகூறுவதற்குப் போந்தசான்ருகும். அதுவருமாறு:

"அன்புடன் நமக்கு அனுப்பிய "நித்தியசீவியம்" எனும் புத்தகத்தின் உபசாரப் பிரதிக்காக நாம்மிகவும் நன்றிகூறுகிறேம். தருந்தகாலத்திலே இதனைவெளியிட்டதனல் சமயபோதகருக்கும், பாடசாலைகளுக்கும் அதிகம்தேவையாயிருந்த ஞானேபதேசநூல்களுள் புதியதும், பிரதானமுமானஒன்றைத் தாங்கள் உதவியிருக்கின்றீர்கள். இன்னும் வீட்டிலிருந்தே தங்கள்வேதஅறிவை ஆழமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர்கைநூலையும் மக்களுக்கு அளித்துள்ளீர்கள். அதுமாத்திரமல்ல, கத்தோலிக்கரல்லாத பிறசமய ஆராய்ச்சியாளரும் தங்களுக்குத் தேவைப்படும் விபரமான விளக்கங்களையும், பொதுக்குறிப்புகளையும் எளிதில்பெற்றுக்கொள்ளச் செய்தீர்கள் ..." என்பதே.

---

## அதிக நெல் விளைவிக்கும் முறைகள்

இந்தியமக்களின் முக்கியஉணவாகும் நெல்லினை விருத்திசெய்வதில் அரசினர் மிக்கஊக்கங்காட்டி வருகின்றனர். இதுசம்பந்தமான ஆராய்ச்சிகளையும் இடைவிடாது நடத்திவருகின்றனர். ஏக்கர்ஒன்றுக்குக் கூடுதலாக நெல்விளைவிப்பவர்கட்குப் பதக்கங்களும், பரிசுகளும் சென்னைஅரசினர் 1950-ம் ஆண்டுதொடக்கம் வழங்கிவருகின்றனர். 1955-ம் ஆண்டிலே இப்போட்டியில் ஈடுபட்டவர்கள் தொகை 10,248 பேர். இவர்களுள் முதலாவதாகப் பரிசும், பதக்கமும் பெற்றவர் திரு. எம். வி. சேதுராவ் என்பவர். இவர் மதுரைக்கணித்தாயுள்ள மார்க்கயங்கோட்டையைச் சேர்ந்தவர். இவர் ஒருஏக்கர் நிலத்தில் 8,000ருத்தல்—133 புசல் நெல்விளைவித்தனராம். இவர் நியாயவாதிப்பரீட்சையில் தேறியவராயினும் அத்தொழிலைவிட்டு இன்று கமச்செய்கையில் ஈடுபட்டுள்ளார். இவர்கூறும் நன்மதிகளாவன: **விதைநெல்லு:—** முதலாவதாக விதைக்கும் நெல் நல்லதாகஇருக்கவேண்டும் என்கிருர். இவர்விதைத்த நெல்லின் பெயர் 'வீதிவிடங்கள்' என்பது. இது சிறந்தஇனத்தைச் சேர்ந்ததாக இருப்பதுடன், மற்றையஇனங்களைப்போல் நெல்லு விளைந்தவுடன் சடுதியில் சொரிவதில்லை.

**நாற்றுப் போடல்:—** நாற்றுப் போடுமுன் நிலத்தை ஒப்புரவியரின்முறையில் நன்குபண்படுத்த வேண்டும். நன்ருகஉழுதுகொத்தி மண் பசுந்தாகும்படி செய்யவேண்டும். எருவை மாவாக்கி மண்ணுடன்கலந்து போடவேண்டும். பாத்திகள் வெவ்வேருக-இடையிற்போதிய வெளியுடையனவாக இருக்கவேண்டும். அப்போதுதான் நீர்உள்ளே தங்காதுவடிவதுடன் அதைக்கிளறிப் பயிலை இடவும் வசதியாகும். இதன்பின்னர் அதற்குமேல் எருப்பரவவேண்டும். அதன்மேல் சாம்பல்தெளிப்பது அவசியம்.

**விதைபோடல்:—** அதன்மேல் நெல்லை ஒப்புரவாகவிதைத்து மண்ணுல்மூடித் தண்ணீர்விடவேண்டும். பத்துநாட்களின்பின் அதற்குள் முளைக்கும் களைகளைப் பிடுங்கிவிடவேண்டும். பிடுங்கியபின் அமோனியம் சல்பேட் எருவுடன்கலந்து தெளிக்கவேண்டும். இது ஒருஏக்கருக்கு 100 ருத்தல்வரையில் போட்டால்போதுமானது.

**நாற்று நடுதல்:—** நாற்றுநடுமுன்னர் வயலுக்குப் பச்சைக்குழைதாழ்ப்பதுஅவசியம். அத்துடன் எருவும் போடவேண்டும். இவை களைப்போடுமுன் இருமுறை உழுவதும் முக்கியமாகும். பின்னர் நாற்றினைப் பத்துஅங்குலத்துக்கு இரண்டுஅல்லது மூன்றுபயிராகவரிசையாகநடவேண்டும்.

**களை பிடுங்குதல்:—** பயிரைநட்டு ஒருமாதஞ்சென்றபின் 15 நாட்களுக்குஒருமுறை களைபிடுங்கவேண்டும். களைபிடுங்கியபின் ஒவ்வொரு முறையும் பயிலைதெளிக்கவேண்டும். பின்னர் 135 நாட்களில் நெல்வெட்டக்கூடியதாக விளைந்துவிடும். இப்படியாக விதைத்துச் செலவுதள்ளித் தாம்பெற்ற இலாபம் 866 ரூபா என மதுரை திரு. எம். வி. சேதுராவ் தெரிவிக்கின்ருர்.

---

## நாச்சிக்குடாத் தபால்

பூநகரிப்பகுதியின் ஓர்பிரிவான நாச்சிக்குடாவில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சந்தியோகுமையோர் திருநாள் இம்மாதம் 5-ந்திகதி ஞாயிறுவாரம் பெரியபாடற்பூசையுடனும், சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவெய்தியது. இதைமுன்னிட்டு மூந்திய ஒன்பது நாட்களாக ஆலயம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்க, விசேஷ ஆராதனைகள் நடைபெற்றன. திருநாளுக்கு முந்தியதினம் பரிசுத்த செபமாலைப்படையணி அங்கத்தவர்கள் படையணியின் கருத்துக்காகத் திவ்வியபூசையைக்கண்டு ஒப்புக்கொடுத்தார்கள். அன்றுபிற்பகல் 6 மணியளவில் வண ஹென்றி மேரே சுவாமியவர்கள் வேஸ்பர்பாட, பலவிடங்களிலுமிருந்து வந்திருந்த பாடசாலைப்பிள்ளைகள் இன்னிசைக்கீதங்கள் பாடினுர்கள். திருநாளன்று காலை 7மணியளவில் பாடசாலைச்சிருர்கள் இனிய கீதங்கள் இசைக்க, சுவாமியவர்கள் பெரிய பாடற்பூசை நிறைவேற்றினுர். பூசையின்முடிவில் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச்செல்லப்பட்டது.

— நிருபர்

---

## "தூய கன்னிமை"

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கவே இருக்கின்றது. இதை ஏற்றுக் கொள்ளக்கூடியவன் ஏற்றுக் கொள்ளக்கடவன். அதாவது, சமராடி வெற்றிபெறக்கூடியவன் தனக்குரியபரிசிலைப் பெற்றுக்கொள்ளக் கடவன்" என்பதாம். (Comment. in Math. 19, 12).

(தொடரும்)

---



முகமாலை

## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

- ஆவணி 23 ந்திகதி மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம்.
- ஆவணி 24-ம் திகதி காலை 7 மணிக்கு பாடற்பூசையும் சுற்றுப்பிரகாரமும்.
- 23-ந்திகதி இரவு 12—1 மணிவரை திருமணித்தியாலம் நடைபெறும்.
- 12-ந்திகதி நோவனைகள் ஆரம்பமாகின்றன.
- 22, 23, 24, 25-ம் திகதிகளில் றெயின்வண்டி கோவிலுக்கு முன்பாகத் தரிக்கும்.


**Fr. J. A. Francis, O. M. I.**
Nallur, Jaffna.

---

"வெல்மார்" "புரேட்வூட்" பியானேக்கள்
இன்னும்
**பேவி ஓர்கன்கள், நிலைமாற்றும் றீட் ஓர்கன்களும் கிடைக்கும்.**
**வெல்மார் பியானே & இம்பீறியல் ஓர்கன் ஏஜென்ஸி,**
**171, சென் ஜேம்ஸ்வீதி, முகத்துவாரம் கொழும்பு 15.**
தந்திவிலாசம்: "பெற்றி புளுவர்" கொழும்பு.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 9 1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

---

அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப் பட்ட பிற்பாடு அங்கு எழுவாயில் குடியேறியவர்கள் செழிப்பான பிரதேசம் முழுவதையும் கைப்பற்றினார்கள். அதற்காகக் காடுகளை அழித்தார்கள். பரட்டைக் காடுகளைக்கூட விட்டார்களில்லை.

இப்பொழுது அவர்களுடைய சந்ததியார் தங்கள் காணி பசளையற்றுக் கெட்டுப் போகிறதையிட்டு மனம் வருந்துகிறார்கள். அந்த நிலமெல்லாம் வருஷா வருஷம் தரிசாய்ப்போகிறது. ஏனெனில், கோடையில் மணல்நிறைந்த புயற் காற்றடிக்கிறது, மாரியில் கடுங் குளிர்க் காற்றடிக்கிறது. அதனால், நிலம் கெட்டுப் போகிறது. இதைத்தடுக்க மரஞ் செறிந்த காடு இல்லை.

இப்பொழுது 1400 மைல் நீளமும், 10 மைல் அகலமுமான நிலப்பரப்பிலே நாற்பது இலட்சம் மரங்களை நடுவதற்குத் தீர்மானித்திருக்கிறார்கள். அதனால், கோடையில் வீசும் மணற்காற்றையும், மாரியில் வீசும் கடுங்குளிர்க் காற்றையும் தடுக்கலாமென்று எண்ணுகிறார்கள்.

நாற்பது இலட்சம் மரங்கள் ! என்ன பிரமாண்டமான வன மகோற்சவம் !

தேவையில்லையென்று நினைத்து அழித்த் காடு இல்லாததினால் அவர்களடையும் நட்டம் மதிக்கரியது.

மனிதர் யந்திரசாதனங்களினால் மயங்கிப் பரலோகத்துக்கடுத்த சிந்தனைகளைத் தம்மனதிலிருந்து அகற்றிவிடலாம். ஞானவரட்சியும் தீராத பிரச்சினைகளாகிய சூறைக்காற்றும் வந்தால் படும் நஷ்டம் அற்பமல்ல. சருவேசுரனிலேயுள்ள விசுவாசமே சீவியச் சுழற்காற்றிலே அகப்பட்டு அழியாமல் எம்மைக் காப்பாற்றும்.

அண்ணா.

---

### மாதாவின் மறுநாமங்களைக் கண்டுபிடியுங்கள்

மாதாவின் பிரதிபலிப்பின் (மறுநாமங்கள்) ஏழுவகைகளில் ஒவ்வொன்றுக்கும், ஓர்சில எழுத்துக்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன. இடைவெளிகளை நிரப்பி அவற்றிலிருந்து முழுப் பெயர்களையும் கண்டுபிடியுங்கள்.

1. .... .... மே .... மாதா
2. பா .... .... .... மாதா
3. .... யா .... .... மாதா
4. .... .... .... லை மாதா
5. ச .... .... .... .... மாதா
6. .... ர் .... து மாதா
7. .... .... ல் .... மாதா

விடைகள் :—

(1) கார்மேல், (2) பாத்திமா, (3) வியாகுல, (4) செபமாலை, (5) சதாசகாய, (6) ஊர்த்து, (7) மாசில்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிப்போனவள்!

— கருக்குப்பனை — பஸில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மூர்ச்சை தெளிந்த சிபிலம்மாள் பண்ணையில் வேலைசெய்துகொண டிருந்த ஆர்தரை அழைத்தாள் தளதளத்த குரலில். மறுகணம் பண்ணைவண்டியும் பயணத்துக்குத் தயாராகிவிட்டது. வண்டியின் வேகத்தைவிடப் பன்மடங்கு கூடுதலாகச் சிபிலம்மாளின் சிந்தனை ஓடிக்கொண் டிருந்தது. மடத்துவாயிலிற் சேர்ந்ததுவண்டி. ஓட்டமும்நடையுமாக ஓடோடிப் பெரியதாயாரின் அறையை அடைந்தாள். "வாருங்கள்....! ஆசனமெடுங்கள்...." இப்படி ஏதோவிதமாகவெல்லாம் அங்குஆசிரியை வரவேற்ருளேதவிர ஊர்சுலாபற்றிய சேதிகூற ஆரம்பிக்கவில்லை. சிபிலம்மாள் ஆவல் மீறியவளாக "எங்கேசென்ருள் அந்தக் கள்ளி! அம்மா! அவளுக்கு வீட்டிலிருக்காத குறுக்குப்புத்தி ஏன் இப்போ வந்துவிட்டது. பட்சமாகவளர்த்ததன் பலன் இதுதானு அவள் காட்டியது?" என்று இப்படி என்னமோவெல்லாம் ஆவேசத்தோடு கூறிவிட்டாள். ஆசிரியை அழுவதா, சிரிப்பதாஎனப்புரியாமல் மௌனமாயிருந்தாள். "ஏன் அம்மா! மௌனம் சாதிக்கிறீர்கள்? உங்களுக்கும் ஏதும் நஷ்டமேற்படுத்தி விட்டுச் சென்ருளா, அந்த நாசக்காரி?" என்று சிபிலம்மாள் கேட்டாள். மாதுளம் பழத்துவிதை வரிசை போன்ற பல் வரிசையைக் காட்டியவளாக பேசலுற்ருள் ஆசிரியை: "அம்மா! உங்கள் மகளுக்கு எங்கள் வீடு பிடிக்காததென்றல்ல. ஆனுல், எங்களைவிடப் பிடித்தமான இரண்டு மூன்று இளம் பெண்கள் அவளையே வட்டமிட்டுக்கொண்டு இருந்தனர். அவர்களது ஏற்பாட்டுடன் எங்கோ ஓடிவிட்டாள் என்றுதான் நான் நினைக்கிறேன். அவர்களோடுகூட என் வீட்டு ஆயாவும் ஓடிவிட்டாள். நல்ல வேளையாக ஏதும் நஷ்டங்கள் விளைக்காமல் ஓடி விட்டார்கள்".

"என்ன?.... அவ்வளவு துணிவா ஏற்பட்டுவிட்டது ஊர்சுலாவுக்கு. இதுவரை நீங்கள் கேள்விப்படவில்லையா அவர்கள் எங்கு ஓடினுர்க" ளென்று திரும்பவும் கேட்டாள் சிபிலம்மாள்.

கேள்விப் பட்டேன். இங்கிருந்து பத்து மைல்களுக்கப்பா லுள்ள பட்டினத்தின் தெருவில் தாசிகள் மடமொன்றுளதாம். அங்குதான் அவர்கள் ஓடிவிட்டார்களாம் — என்று வெறுப்புடன் கூறிவிட்டாள் ஆசிரியை. சிபிலம்மாளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மகளைப்பற்றிய அபிமானமத்தனையும் அறுவதற்கு அந்தச் சொற்கள் காலாக அமைந்தன. நான் வருகிறேனம்மா என்று கூறி ஆவேசம் பிடித்தவள் போல விசையாக வெளிக் கிளம்பினுள். சிபிலம்மாளின்மனம் ஓடும்வேகத்தோடு போட்டிபோட்டுக்கொண்டு ஓடியவண்டி பத்துமைலைக்கடந்து பரத்தை வீட்டு வாசலை அடைந்தது.

"இங்கேயார்?...." என உரிமைத் தோரணையிற் கேட்டாள் சிபிலம்மாள். —"ஏன்? எதற்கு?" என ஏககாலத்தில் இருகேள்விகள் உள்ளிருந்து அதிகார தோரணையில் எழுந்தன. "என் மகள் ஊர்சுலா இங்கு வந்தாளா? அவளைக் காணவேண்டும்" எனப் பதிலிறுத்தாள் சிபிலம்மாள். அவ்வளவுக்கும் வீட்டுப் படியிற்கூட அவள் அடியெடுத்து வைக்கவில்லை.

"ஆமாம். ... உன்மகளா ஊர்சுலா? நல்ல கெட்டிக்காரி! நம்பியவர்களுக்கு மோசடி பண்ண நல்லாகப்பழக்கி விட்டிருக்கிருய். அப்படித்தானே" என்று கர்ச்சித்தாள் கணிகை யொருத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபிலம்மாளுக்கோ கூவென அழலாம் போல ஏற்பட்டது. "என்ன எனது மகள் இங்கில்லையா ? உங்களுக்கும் நம் பிக்கை மோசடி பண்ணிவிட்டாளா ? அவள் இப்போ எங்கே ?" என்று ஆத் திரத்துடன் கேட்டாள் சிபிலம்மாள்.

"போங்கள் உங்கள்மகள் மலைச்சாரலி லுள்ள மடத்துக்குப் போனதாகக்கேள் விப்பட்டேன். சந்தித்தால் இப்பக்க மாக வந்துபோங்கள்"என்றுள் வேறோர் கணிகை கர்ச்சிப்பின்றி.

இருட்டி விட்டது. மலைச் சாரலுக்குச் செல்வது எப்படி ? வண்டிக்காரன் ஆர் தரையும் அப்போதே அனுப்பிவிட் டேனே ! என்னசெய்வோம்? —என்று சிந்தித்துக்கொண்டு இரவுவிடுதியொன் றை அடைந்தாள் சிபிலம்மாள். அதி காலை 4 மணியிருக்கும் படபடவென்று சிபிலம்மாள்புறப்பட்டுப் பெய்யும் பனிப் புகாரைப் பொருட்படுத்தாது மலைச் சாரலை நோக்கிநடந்தாள். நிலத்திற் படர்ந்த பனி பாதங்களை விறைக்கச் செய்வதாக இருந்தது. பக்கத்திலிருந்த ரோஜாமலர்கள் சுகந்தம் பரப்பிக் கொண்டிருந்தன ......

(தொடரும்)

---

# கொள்ளை போகிறது !

சோமு வழக்கம்போல் வீட்டிற் குள்ளே யிருந்தான். அவன் அதிகமாக வெளியே வெளிக்கிடுவது இல்லை. பாட சாலை முடிந்துவந்ததும், அவனை எந்நேர மும் வீட்டைத்தவிர வேறெங்கும் காண முடியாது. அவன் வீட்டினுள்ளிருந்து தனக்கும் தன்நண்பன் சேகருக்கு மிடையே நடந்தவிசித்திர பந்தையத் தைப்பற்றி யோசித்தான். யார் யாரை முதலில் ஏமாற்றுகிறரோ, அவரை மற்றவர் அன்றிரவு நடக்கும் படக் காட்சிக்கு அழைத்துச்செல்ல வேண் டும். "சேகரை எப்படி ஏமாற்றமுடி யும்? என்று சோமு தனக்குள்ளே யோசித்துக்கொண்டான்.

இப்படி இவன் யோசித்துக்கொண் டிருக்கையில் சேகரும் சோமுவை எப் படி ஏமாற்ற முடியும் என்று தீவிரமாய் யோசித்து ஒருமுடிவுக்கு வந்தான். அந்தமுடிவுடன் சேகர் சோமுவைத் தேடிப்போனுன். தான் இன்றைக்கு நிச்சயமாகப் படம்பார்க்கமுடியும் என்ற நினைவுடன் அவன் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான்.

தற்சமயமாக ஜன்னலூடாக எட்டிப் பார்த்தசோமு சேகரைக் கண்டான். அவன் முகத்தில் தாண்டவமாடிய சந் தோஷத்தைக்கண்டு சோமுதனக்குள் ளே சிரித்தான். ஏனெனில், அவனும் ஒருமுடிவுக்குவந்திருந்தான். திடீரெனச் சோமு "ஐயோ ! கள்ளன், கள்ளன்" என்று கத்தினுன் சேகர்சற்றுயோசித் தான். சோமு பொய்சொன்னுல் அவன் தோற்றுவிடுவான். பந்தையம் பிடிக்கும் போதே இருவரும் பொய்சொல்லக் கூடாதுஎன்று ஒப்புக்கொண்டனர். ஆகையால், இதுபொய்யாக இருக்கமுடி யாது என்று நினைத்துச் சோமுவிடம் ஓடினுன். சோமுசத்தமிடுவதை இன் னும் நிறுத்தவில்லை.

சோமுவை அடைந்த சேகர் "எங்கே திருடன் ?" என்றுன். "காப்பாற்று வாயா? சொன்னுல் காப்பாற்றுவாயா?" என்றுன் சோமு.

"நிச்சயம் காப்பாற்றுவேன் "

"நான் கடையில் கடன் எடுப்பது வழக்கம். கடைக்காரன் இப்போது என் னைத் தேடி வருகிறுன். என்பணம் பறி போகப் போகிறது. சொன்ன சொல் லைத் தட்டாது என்னைக் காப்பாற்று" என்றுன். சேகரால் வேறென்றும் செய்யமுடியவில்லை. " எவ்வளவு கொடு க்கவேண்டும்."

" ஒரு ரூபா இருபது சதம்."

சேகரால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. கடைக்காரன் கடனையும் கொடுத்து அன்றிரவு சோமுவையும் படத்துக்குக் கூட்டிச் சென்றுன்.

(டி. எம். ஜி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லி சொற்பலன்.

சிறுவன் 'மகிபன்' உடைய தாய் பல்லிச் சாஸ்திரத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவள்.

ஒரு நாள்: தாய் வீட்டிலில்லாத சமயத்தில், தாய் மறைத்து வைத்திருந்த மாம்பழத்தை யெடுத்துச் சாப்பிடுவதற்காக, மகிபன் மாம்பழப்பெட்டியண்டை சென்றான். அவ்வேளை: வீட்டுச் செத்தைக்குள்ளிருந்த 'பல்லியார்' ஏதோ சொன்னார்.... சூழ்நிலைதானே மனிதனை உருவாக்குகிறது. மாதா-பிதா எவ்வழியோ, மைந்தரும் அவ்வழிதானே!

"நான் மாம்பழம் எடுத்தேனென்று அம்மாவிடம் சொல்லுவேனென்கிறாயா? இரு. இன்றைக்குனக்குச் செவ்வையான பாடம் படிப்பிக்கிறேன்" என்று, பல்லியின்மேற் கோபமடைந்தமகிபன், தீப்பெட்டியைத் தட்டி பல்லியிருந்ததற்கு நேரே செத்தையில் வைத்து விட்டான்.....

. வீட்டில் நெருப்பு மூண்டு விட்டது. விஷயத்தையறிந்த அண்டை வீட்டார், அயலிலுள்ளவர்களெல்லாரும் பதறியபடி ஓடிவந்தனர். மங்கையும் வந்துவிட்டாள். வீட்டைக் காப்பாற்றும் பொருட்டு அவர்கள் செய்த முயற்சிகளனைத்தும் வியர்த்தமாகிவிட்டன.....

வீடு அக்கினிக்கு இரையாகிவிட்டது. வருவோர், போவோர் தங்கள் அனுதாபத்தை வீட்டுக்காரருக்குச் சொல்லிக்கொண்டார்கள். அவ்வேளை அவ்வூர்ச் சோதிடர், 'கெவுளிச் சித்தர்' என்பவரும் அங்குவந்தார்..... அனுதாபத்தை முதலிற் கூறிக்கொண்டார். அப்புறம், மகிபனை நோக்கி: "ஏன் தம்பி! நீ நின்றதற்கு எந்தப் பக்கத்தில் பல்லி சொன்னது?" என்று கேட்டார்.

சிறுவன், "இதோ! இந்தப் பக்கமாய்த்தான் சொன்னது" என்று கையை நீட்டிக் காட்டினான்.

"வடகிழக்கு! இன்றைக்கு வெள்ளிக்கிழமை. அருக்கன் நிலை இன்றைக்கு வடகிழக்குத்தான். முதலாவது வீட்டிற்தான் சொல்லி யிருக்கிறது. 'நாசம்' என்றுதான் பலன் சொல்லுது. வீடு எரியப்போகிறதென்று பல்லி சொல்லி யிருக்கிறது...." என்று, சாஸ்திரியார் பல்லிப்பலன் கூறினார்.

"ஏன் சாஸ்திரியார்! வீடு எரியப்போகிறதை ஏலவே தெரிந்த பல்லி, பெரிய மனிதர்களிடம் சொல்லியிருக்கலாமல்லவா?" என்றான் அங்குநின்ற ஒரு இளைஞன். "காலம்மாறிப்போச்சு" என்று சோதிடர் முணுமுணுத்துக் கொண்டு மெல்ல நழுவினார்.

—எஸ். எல். சவுந்தரநாயகம்

## பிழை நீக்கல்

பின்வருவனவற்றில் எவை யெவை பிழையானவை என்று குறிப்பிடுக.

1. கடைசி இராப் போசனத்திலேயே தேவநற்கருணை உண்டாக்கப்பட்டது.
2. சற்பிரசாதத்தில் நீங்கள் முழு ஆண்டவரையும் பெறுவதில்லை.
3. பாவ மன்னிப்பே தேவநற்கருணையின் பிரதான பலனாகும்.
4. ஞானவழியாகத் தேவநற்கருணை உட்கொள்வதும், தேவதிரவிய அனுமான வழியாகத் தேவநற்கருணை உட்கொள்வதும் ஒன்றேதான்.
5. தேவநற்கருணை பெற முடியாமல் சாகிறவன் இரட்சிக்கப்படுகிறான்.
6. தேவநற்கருணை பெறமுன்னர் சாப்பிடப்படாது: ஆனால், எதையும் குடிக்கலாம்.
7. தேவநற்கருணையாக வசீகரஞ்செய்யப்படும் அப்பம் அரிசிமாவில் செய்யப்படுவது.
8. உத்தம மனஸ்தாபப்பட்டுச் சாகிறவன் பாவசங்கீர்த்தனம் செய்யாவிட்டால் மோட்சம் சேர மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org